பக்கங்கள்: 16 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 புரட்டாதி 15 திங்கட்கிழமை 01.10.2018 கதிர் 330

இனிது ரகசியம் அல்ல!

வழக்கமாக ஓர் ஆட்சித் தரப்பு தனது பதவிக் காலம் முடிவடையும் போது செய்யும் ஒரு விடயம் இருக்கின்றது. சிக்கலுக்குரிய கொடுப்பனவுகளை, கோவைகளை நேர்சீர் செய்வது – அல்லது Clear பண்ணுவது.

அடுத்து பக்கம் 03

# அரசியல் கைதிகள் குறித்துக் கூட்டமைப்பு நாளையும் மறுதினமும் முக்கியமான பேச்சு

## நீதி அமைச்சருடன் முதலில் ஜனாதிபதியுடன் பின்னர்



- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 01

தொடர்ந்து தடுப்புக் காவலிலும் சிறைகளிலும் வாடும் தமிழ்க் கைதிகள் தொடர்பில் நாளை நீதியமைச்சர் மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோருடனும், நாளை மறுதினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முக்கியமான – தீர்க்கமான – பேச்சுக்களில் ஈடுபடும்.

– கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட எம்.பியுமான எம்.ஏ.சுமந்திரன் இந்தத் தகவலை நேற்று வெளியிட்டார். பக்கம் 03

## நாடு திரும்பினார் ஜனாதிபதி

கொழும்பு, ஒக்.02

ஐக்கிய நாடுகள் சபையின் 73 ஆவது பொதுச் சபை கூட்டத்தில் கலந்து கொள்ள நியூயோர்க் சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று அதிகாலை நாடு திரும்பினார்.

இந்த விஜயத்தின் பக்கம் 14

## போர்க்குற்றச்சாட்டுகளுக்கு மைத்திரிபாலவே பொறுப்பு

### விமல் வீரவன்ஸ வலியுறுத்து



கொழும்பு, ஒக். 01

போர்க் குற்றச்சாட்டுகளுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே பொறுப்புக்கூறவேண்டும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான பக்கம் 14

## மானிப்பாய் வாள்வெட்டுச் சம்பவம்: முக்கிய சந்தேக நபர் நேற்றுக் கைது

மானிப்பாய் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய சந்தேகநபர் வட்டுக்கோட்டையில் வைத்து நேற்றுக் காலை கைது செய்யப் பக்கம் 14

## ஐ.ஜி.பியின் ஸ்கொட்லாந்து விஜயம் எதிர்ப்பால் கடைசி நேரத்தில் ரத்து



ஸ்கொட்லாந்து, ஒக்.01

இலங்கைப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவின் சர்ச்சைக்குரிய ஸ்கொட்லாந்து விஜயம் கடைசி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டது.

வெளி அழுத்தங்கள் பக்கம் 14

## விக்கி ஒரு நிலைப்பாட்டுக்கு வந்த பின்பே அவர் பற்றிக் கூட்டமைப்பு கருத்துரைக்கும்

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 01

வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் இன்று ஒரு கருத்தைச்சொல்கிறார்,நாளைக்கு ஒரு கருத்தைச் பக்கம் 14

## டிசெ.31 இற்குள் தீர்வின்றேல் அரசுடனான இணக்கம் வாபஸ்

### ரெலோவின் மாநாட்டில் நேற்றுத் தீர்மானம்

மட்டக்களப்பு, ஒக்.01

தேசிய இனப்பிரச்சினைக்கு காத்திரமான – உருப்படியான – தீர்வு யோசனை ஒன்றை எதிர்வரும் டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் முன்வைப்பதற்கு நல்லாட்சி அரசு முன் வரவேண் பக்கம் 14

## விரைவில் அமைச்சரவை மாற்றம்; சட்டம், ஒழுங்கு ஜனாதிபதியின் வசம்?

கொழும்பு, ஒக்.01

நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி அரசின் அமைச்சரவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் மறுசீரமைக்கப்படவுள்ளது எனத் தகவல்கள் கசிந்துள்ளன.

இதன்படி பக்கம் 14

## இறுதிப்போருக்கு இந்தியாவே முழு ஆசீர்வாதம் வழங்கியது!

### விளக்குகின்றார் பொன்சேகா

கொழும்பு, ஒக். 01

இறுதிக்கட்டப்போரின் போது இந்தியா ஆசீர்வதித்ததே தவிர எவ்வித அழுத்தங்களையும் பிரயோகிக்கவில்லை என்று போரின் இறுதிக்கட்டத்தில் இலங்கை இராணுவத்தை வழிநடத்திய தளபதியான அமைச்சர் பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா நேற்று தெரி பக்கம் 14

## நாளை விசேட அமைச்சரவை

கொழும்பு, ஒக். 01

பரபரப்பான அரசியல் சூழ்நிலைக்கு மத்தியில் நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி அரசின் அமைச்சரவைக் கூட்டம் நாளை செவ்வாய்க் பக்கம் 14

## சி.ஐ.டியின் விசாரணை வலைக்குள் ரி.ஐ.டி. தலைவர் நாலக்க டி சில்வா!

### உளவுப் பிரிவும் உஷார் நிலையில்

கொழும்பு, ஒக். 01

பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப்பிரிவுக்கு பொறுப்பாக இருந்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக்க டி சில்வாவிடம், சி.ஐ.டியினர் விரைவில் விசா பக்கம் 14

## யுத்தப் பகுதியில் கொத்துக் குண்டுகளின் எச்சங்கள்; இலங்கையின் விளக்கத்தைக் கோருகிறார் சூக்கா



போர் நடந்த பகுதிகளில் கண்ணிவெடிகளை அகற்றுபவர்கள் கொத்துக்குண்டுகளின் எச்சங்களைக் கண்டுபிடித்துள்ளமை குறித்து இலங்கை அரசாங்கம் விளக்கமளிக்க வேண்டும் என்று கோரியுள்ளார், சர்வதேச மனித உரிமை செயற்பாட்டாளர் யஸ்மின் சூக்கா அம்மையார்.

கொத்துக்குண்டுகள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட தடைசெய்யப்பட்ட ஆயுதங்கள் குறித்த அமைப்பின் தலைமைப்பொறுப்பை இலங்கை பொறுப்பேற்றுள்ளதன் (Convention on Cluster Munitions) காரணமாக இலங்கை தனது நாட்டில் கொத்துக்குண்டுகள் பயன்படுத்தப்பட்டமைக்கான ஆதாரங்கள் கிடைப்பது குறித்து தெளிவுபடுத்தவேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். பக்கம் 14

# பாதுகாப்பு அமைச்சுக்கே அதிக ஒதுக்கீடு இம்முறை ரூ. 30 ஆயிரத்து 610 கோடி நிதி

2019 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில், பாதுகாப்பு அமைச்சுக்கே அதிகளவு நிதி ஒதுக்கப் படவுள்ளதாக, நிதி ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய, 2019 ஆம் ஆண்டில் பாதுகாப்புக்காக 30 ஆயிரத்து 610 கோடி ரூபாவுக்கும் அதிகமாக ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

2018 ஆம் ஆண்டில் பாதுகாப்புச் செலவினங்களுக்காக, 29 ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. அடுத்த ஆண்டில் இது மேலும் அதிகரிக்கவுள்ளது.

இலங்கை இராணுவம், விமானப் படை, கடற்படை, கடலோரக்காவல் படை மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களம் ஆகியவற்றை உள்ளடக்கிய பாதுகாப்பு அமைச்சுக்கே இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில், விவசாய அமைச்சுக்கான ஒதுக்கீடு மூன்று மடங்கு அதிகரிக்கவுள்ளது. இந்த ஆண்டில், 2 ஆயிரத்து 300 கோடி ரூபா ஒதுக்கப்பட்ட நிலையில், அடுத்த ஆண்டு இது 6 ஆயிரத்து 300 கோடி ரூபாவாக அதிகரிக்கப்படும்.

போக்குவரத்து, சிவில் விமான சேவை, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள், நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல், சுகாதாரம், ஊட்டச்சத்து மற்றும் சுதேச மருத்துவம், பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகாரம், ஜனாதிபதி செயலகம் உள்ளிட்டவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகளும் அடுத்த ஆண்டில் அதிகரிக்கப்படவுள்ளன.

2019ஆம் ஆண்டுக்கான மொத்த அரசாங்க செலவினங்கள், 2,281.5 பில்லியன் ரூபாவாக – அதாவது 2லட்சத்து 28 ஆயிரத்து 268 கோடி ரூபா (ரூ. 2,281,682,472,000) ஆக இருக்கும் என்றும், மதிப்பிடப்பட்டுள்ளது.

நிதியமைச்சினால் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம், அடுத்தமாதம் இலங்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எதிர்வரும் நவம்பர் 5ஆம் திகதி நாடாளுமன்றத்தில் 2019ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் மங்கள சமரவீர சமர்ப்பிப்பார்.

## ரூபாயை விட ராஜபக்ஷவினர் பெறுமதி இழந்துள்ளனர்!



அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம்

கொழும்பு, ஒக். 01

ரூபாவை விட ராஜபக்ஷவினர் பெறுமதி இழந்துள்ளனர் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளரான அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கட்டுபெத்த பொலிஸ் நிலையத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

1994 ஆம் ஆண்டு தற்போதைய பிரதமர் அரசை கையளிக்கும் போது ஒரு டொலரின் பெறுமதி 49 ரூபாவாக இருந்தது. 2001 ஆம் ஆண்டுரணில் விக்கிரமசிங்க ஆட்சி பொறுப்பை ஏற்கும் போது டொலரின் பெறுமதி 93 ரூபாவாக அதிகரித்திருந்தது.

ஐக்கிய தேசியக்கட்சி மீண்டும் ஆட்சி அதிகாரத்தை 2004 ஆம் ஆண்டு கையளிக்கும் போது டொலரின் பெறுமதியானது 96 ரூபாவாக இருந்தது. மீண்டும் 2015 ஆம் ஆண்டு ஆட்சியை பொறுபேற்கும் போது டொலரின் பெறுமதி 144 ரூபாவாக அதிகரித்திருந்தது.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக பதவிக்கு வந்த மகாராஜா என அழைக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ 2015 ஆம் ஆண்டு பெறுமதி இழந்து தேர்தலில் தோற்றுப் போனார்.

இதன் பின்னர் பிரதமர் பதவியை பெறவும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பெறவும் முயற்சித்தார். எனினும் அவர் பெறுமதி இழந்து போனார்.

இவ்வாறு பார்க்கும் போது ரூபாயை விட ராஜபக்ஷவினர் கடந்த காலங்களில் பெறுமதி இழந்து போயினர் எனவும் அமைச்சர் அகில விராஜ் காரியவசம் குறிப்பிட்டுள்ளார்

## நாலக டி சில்வாவிடம் அடுத்த சில தினங்களில் வாக்குமூலம் பெறப்படும்

### பிரதி அமைச்சர் நளின் பண்டார

பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக டி சில்வாவிடம் அடுத்த சில தினங்களில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் வாக்குமூலத்தை பெறவுள்ளது என்று பிரதியமைச்சர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக டி சில்வாவுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் வெளிப்படையான வகையில் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோரை கொலை செய்யும் சதித்திட்டம் தொடர்பில் ஊழல் எதிர்ப்பு படையணியின் பணிப்பாளர் நாமல் குமார வெளியிட்ட தகவல் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை நடத்தி வருகிறது.

இந்த விசாரணைகள் தொடர்பாக சட்டம் மற்றும் ஒழுங்கு பிரதியமைச்சர் நளின் பண்டார கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த தகவல்களை தெரிவித்துள்ளார்.

## டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமானம் குறைவு; இறக்குமதியில் வரையறை மேற்கொள்ள அரசு அறிவிப்பு!

கொழும்பு, ஒக். 01

அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமானம் குறைந்திருப்பதால் இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஏற்பட்டுள்ள பாதிப்பைக் கட்டுப்படுத்துவதற்காக இறக்குமதி தொடர்பில் தற்காலிக தடைகளை விதிக்க அரசு தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பாக நிதி மற்றும் ஊடக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

நேற்று நள்ளிரவு முதல் இந்த வரையறை அமுல்படுத்தப்படுகிறது. இதன்படி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தீர்வை வரியற்ற வாகனங்களுக்காக அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கை ஒரு வருட காலத்திற்கு நிறுத்தப்படும்.

அமைச்சர்கள் திணைக்கள கூட்டுத்தாபன மற்றும் அரச நிறுவனங்களுக்கான வாகனங்களை இறக்குமதி செய்யும் நடவடிக்கை மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்படும்.

சலுகை அடிப்படையில் வாகன இறக்குமதிக்காக அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் 6 மாத காலத்திற்கு நிறுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதிக்குள் சலுகை அடிப்படையிலான அனுமதிப்பத்திரங்களுக்கு உரிய கடன் ஆவணம் வழங்கப்படமாட்டாது. ஹைபிரிட் வாகனங்களின் பெறுமதிப்படி கடன் விகிதம் 70ற்கு 30 இலிருந்து 50ற்கு 50 என்ற விகிதம் வரை திருத்தப்படும்.

பஸ், லொறி, அம்புலன்ஸ் போன்ற வாகனங்களுக்கான கடன் ஆவணத்தை வழங்கும் போது நூற்றுக்கு 200 சதவீத நிதி வரையறை விதிக்கப்படும்.

அதேபோல் குளிர்சாதனப் பெட்டி, குளிரூட்டல் இயந்திரம், தொலைக்காட்சி வாசனைத்திரவியங்கள்கையடக்கத்தொலைபேசி, சலவை இயந்திரம், வாகன டயர் என்பனவற்றை இறக்குமதி செய்வதற்காக கடன் ஆவணங்களை வழங்கும் போது நூற்றுக்கு 100 சதவீத நிதி வரையறை விதிக்கப்படும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(கு)

## மல்கம் ரஞ்சித் ஆண்டகை சம்பந்தமாக நான் கூறியவை எனது தனிப்பட்ட கருத்து!

### நிதி அமைச்சர் மங்கள சமரவீர கூறுகிறார்

மாத்தறை, ஒக். 01

கத்தோலிக்க திருச்சபையின் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை சம்பந்தமாக தான் கூறி கருத்து தனது தனிப்பட்ட கருத்து எனவும், அந்த நிலைப்பாட்டில் தான் தொடர்ந்தும் இருக்கிறேன் என்றும் நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நடைபெற்ற வைபவம் ஒன்றின் பின்னர் ஊடகங்களிடம் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

மனித உரிமைகளுக்காக போராடவே நான் அரசியலுக்கு வந்தேன்.

மனித உரிமை தேவையற்றது என எவராவது கூறுவார்கள் எனில் அதனை அருவருப்புடன் நிராகரிக்கின்றேன். கர்தினால் சார்பில் குரல் கொடுப்பவர்கள் போதைப் பொருள் விற்பனையாளர்கள். இது அவருக்கு செய்யும் அவமரியாதை எனவும் அமைச்சர் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமைகள் தொடர்பாக கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வெளியிட்ட கருத்து தொடர்பில் அமைச்சர் மங்கள சமரவீர தனது எதிர்ப்பை டுவிட்டரில் பதிவு செய்திருந்தார்.

இதற்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லங்சா வர்ணகுலசூரிய கருத்து வெளியிட்டிருந்தார்.

## ரி.ஐ.டியினருக்கு கொமாண்டோ பயிற்சி அளிக்க கோரினார் நாலக சில்வா!

கொழும்பு, ஒக். 01

பொலிஸாரின் தீவிரவாத தடுப்புப் பிரிவைச் சேர்ந்த ஒரு குழுவினருக்கு, கொமாண்டோ பயிற்சி அளிக்குமாறு, அதன் பொறுப்பதிகாரியாக இருந்த பிரதி பொலிஸ் அதிபர் நாலக சில்வா தம்மிடம் கேட்டார் என்று சிறப்பு அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி லதீப் தெரிவித்துள்ளார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அளித்துள்ள வாக்குமூலத்திலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஜனாதிபதி, முன்னாள் ஜனாதிபதி மற்றும் அவரது குடும்பத்தினரைக் கொல்லும் சதித் திட்டம் தொடர்பாக, பிரதி பொலிஸ் மா அதிபர் நாலக சில்வாவுக்கு எதிராகநடத்தப்படும் விசாரணைகளின் போதே சிறப்பு அதிரடிப் படையின் கட்டளை அதிகாரி மேற்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளார்.

பொலிஸ் மா அதிபரின் அனுமதியுடனேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்திருந்தார் என்றும் சிறப்பு அதிரடிப் படையின் கட்டளை அதிகாரி லதீப் தெரிவித்துள்ளார்.

(கு)

## ராஜபக்ஷவினரை ஆட்சிக்கு வர இடமளிக்கப் போவதில்லை!

### அமைச்சர் நவீன் திஸாநாயக்க கேகாலையில் தெரிவிப்பு

ராஜபக்ஷவினரை மீண்டும் ஆட்சிக்கு வர இடமளிக்க போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரான அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கேகாலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

தற்போதைய அரசு கடந்த சில வருடங்களில் மக்கள் உணரும் வகையிலான அபிவிருத்திகளை செய்துள்ளது.

எனினும், பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டன என்பதை ஒப்புக்கொள்கிறோம். ஐக்கிய தேசியக் கட்சியினர் அச்சம் கொள்ள தேவையில்லை.

எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின் கீழ் அனைத்து துறைகளிலும் அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமே இளைஞர்களுக்காக குரல் கொடுக்கும் கட்சி எனவும் அமைச்சர் நவீன் திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

## கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் முன்னெடுக்கப்பட்ட சிரமதானப் பணிகள்!

கிளிநொச்சி – கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த சிரமதான பணிகள் நேற்று கரைச்சி பிரதேச சபையின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதில் வட மாகாணசபை உறுப்பினர்களான சு.பசுபதிப்பிள்ளை, த.குருகுலராஜா, பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சு.சுரேன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.





காலைக்கதிர்
Kalaikkathir

## இடமாற்றம்

தேசிய இடமாற்ற கொள்கைக்கு அமைவாக தேசிய பாடசாலைகளில் 3 கட்டங்களாக இடமாற்றம் நடைபெறுகின்றது என்று திருகோணமலை மாவட்ட கல்வி அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

அதன் இரண்டாம் பகுதியே கிண்ணியா மத்திய கல்லூரியில் கடந்த வாரம் நடைபெற்றுள்ளது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# உண்ணா விரதப் போரில் மேலும் 2 கைதிகள் இணைவு

**அநுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள 10 தமிழ் அரசியல் கைதிகளுடன் மேலும் இரு அரசியல் கைதிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் போராட்டத்தில் இணைந்துள்ளனர்.இதனையடுத்து உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் எண்ணிக்கை 12 ஆக அதிகரித்துள்ளது.யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த புருசோத்தமன் அரவிந்தன், வவுனியாவைச் சேர்ந்த நல்லான் சிவலிங்கம் ஆகிய இருவருமே நேற்று முதல் போராட்டத்தில் இணைந்துள்ளனர்.**

இந்நிலையில் இன்று திங்கள் முதல் தமது மருத்துவ உதவிகளையும் புறக்கணித்து உணவு தவிர்ப்பு போராட்டத்தை முனைப்படையச்செய்ய அரசியல் கைதிகள் முடிவு செய்துள்ளனர்.அது தொடர்பில் நேற்று அவர்கள் உத்தியோகபூர்வமாக எழுத்து மூலம் சிறைச்சாலை அத்தியட்சகரிற்கு அறியத் தந்துள்ளனர்.தமக்கான மருத்துவ உதவிகளைத் தாங்கள் புறக்கணிக்க உள்ளனர் என அவர்கள் சிங்கள மொழியில் எழுதி ஒப்படைத்த மேற்படி கடிதத்தில் தெரிவித்துள்ளர்.

# கிளிநொச்சி மலையாளபுரம் பகுதியில் கேரள கஞ்சா மீட்பு!

கிளிநொச்சி,ஒக்.01

கிளிநொச்சி மலையாளபுரம் பகுதியில் நான்கு கிலோ கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மலையாளபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு பிற்பகல் ஏழு மணியளவில் சந்தேகத்திடமான வாகனம் ஒன்று சொல்வதை அவதானித்த கிராமத்தின் இளைஞர்கள் அந்த வாகனத்தை பின் தொடர்ந்துள்ளனர்.

இளைஞர்கள் பின்தொடர்வதை அவதானித்த அவர்கள் குறுக்கு வீதிகள் ஊடாக வேகமாகப் பயணித்துள்ளனர். பின்னர் வழிதவறி குளப்பாதை ஒன்றினுள் நுழைந்து, வாகனத்தில் இருந்த நான்கு பொதிகளை எறிந்து விட்டு தொடர்ந்து பயணித்த போது அங்கு பாதை முடிவடைந்ததால் வாகனத்தை விட்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

அவர்கள் எறிந்த பொதிகளைப் பார்வையிட்ட பொழுது சுமார் ஒரு கிலோ அளவிலான நான்கு கேரள கஞ்சா பொதிகள் காணப்பட்டுள்ளன.

இதன் பின்னர் கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் சட்டவிரோத மது ஒழிப்புப் பிரிவு விசேட குழு வினருக்கு வழங்கப்பட்டதகவலைஅடுத்துசம்பவ இடத்துக்குச் சென்ற பொறுப்பதிகாரி சத்துரங்க தலைமையிலான குழுவினர் இந்த கஞ்சாபொதிகளையும் வாகனத்தையும் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றுள்ளனர். (க-70)

# வாள்வெட்டுக் குழுவினர் மூவர் நேற்றுக் கோப்பாயில் கைது!

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வாள்வெட்டுச்சம்பவங்களின்தொடர்புடைய ஆவாக் குழு உறுப்பினர்கள் மூவரைப் கோப்பாய் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

கோப்பாய்பகுதியில்தாக்குதலொன்றை மேற் கொள்வதற்கு ஆவா குழுவினர் வந்துள்ளனர். அவர்களைக் கண்டு அங்கு நின்ற இருந்த இளைஞர்கள் தப்பியோடியுள்ளனர். ஆனால் ஆவா குழுவினர் அங்கு நின்றவர்களைத் துரத்திச் சென்றுள்ளனர்.

இதன்போது இளைஞர் ஒருவர் கிணறு ஒன்றுக்குள் குதித்து மறைந்து தப்பிக்க முயன்றுள்ளார் .இதனை அவதானித்த வாள்வெட்டுக் குழுவினர் கிணற்றுக்குள் மறைந்து இருப்பவர் மீது கிணற்றுக்குள் வைத்தே கல்வீச்சுத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இவ்வாறு ஆவா குழுவினர் கிணற்றுக்குள் வைத்துத் தாக்குவது அவதானித்த அப்பகுதி மக்கள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர்.

அச்சமயம் சம்பவம் நடைபெறும் வீதியால் கோப்பாய் பொலிஸார் வந்தமையால் சம்பவம் தொடர்பில் அவர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து விரைந்து செயற்பட்ட பொலிஸார் தாக்கப்பட்டுக்கொண்டிருந்த இளைஞரைக் காப்பாற்றியமையுடன் தாக்குதல் நடத்திய இளைஞர்களில் மூவரைக் கைது செய்தனர். ஆனாலும் அங்கு தாக்குதல் நடத்திய ஏனையவர்கள் தப்பிச் சென்றுள்ளனர். இச் சம்பவம் தொடர்பில் மேலதிகமாக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சிக்கு – நிர்வாகத்துக்கு – வரப் போகும் தரப்புகளுக்கு வசதியாகத் தவறான தடங்களை விட்டுச் செல்லக் கூடாது என்பதால் இப்போதே – அதிகாரத்தில் இருக்கும் போதே – அந்த விடயங்களை உரிய முறையில் கையாண்டு முடிப்பது வழமைதான்.

இன்னும் 24 நாள்களில் வடக்கு மாகாண சபையின் பதவிக் காலம் காலாவதியாக இருக்கையில் அங்கும் இத்தகை Clearance நடவடிக்கைகள் இடம்பெறுகின்றமை தவிர்க்க முடியாததே.

நீதிமன்ற உத்தரவின் விளைவால் வடக்கு மாகாண அமைச்சரவை நான்கு, ஐந்து மாதங்களாகக் கூடவில்லை.

நீதிமன்ற உத்தரவு காரணமாக முதலமைச்சரையும், டெனிஸ்வரனையும் தவிர எஞ்சிய மூன்று அமைச்சர்கள் யார் என்ற இழுபறி நிலை நீடிக்கின்றது. இந்தச் சபையின் பதவிக் காலம் முடிந்தாலும் இந்தச் சர்ச்சைக்கு முடிவு கிட்டுமா என்பது சந்தேகமே.

அமைச்சரவை கூடாதமையால் பல விடயங்கள் அங்கீகரிக்கப்படவில்லை. பல கொடுப்பனவுகள் தேங்கிக் கிடக்கின்றன. பல கொடுப்பனவுக்குரிய செலவினங்கள், அமைச்சரவை கூடாததால் – அமைச்சர் வாரியத்தின் அங்கீகாரமின்றி –செலுத்தப்படாமல் கிடக்கின்றன.

இதனால், சபையின் பதவிக் காலம் முடிவடைந்த பின்னர் பல கொடுப்பனவுக்குரிய விவகாரங்கள் இழுபறிப்படலாம்.

இதனைத் தவிர்ப்பதற்காக அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் ஒரு முயற்சி எடுத்திருக்கின்றார் என்று தெரிகின்றது.

அமைச்சர் வாரியத்தினால் அங்கீகரிக்கப்பட வேண்டிய கொடுப்பனவு விடயங்களையும் உள்ளடக்கியதான குறைநிரப்பு பிரேரணை ஒன்றை அடுத்து வரும் – கடைசி நேர– சபை அமர்வுகளில் அங்கீகரித்து அதன் மூலம் அவற்றைச் செலுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதுதான் அந்தத் திட்டம்.

நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவின் படி முதலமைச்சரும், டெனிஸ்வரனும் மாகாண அமைச்சரவை உறுப்பினர்களாக இன்னும் இருக்கின்றார்கள்.

இதில் முதல்வரே வடக்கு மாகாண சபையின் நிதி அமைச்சர். எனவே அவர் மூலம் குறை நிரப்பு பிரேரணை ஒன்றின் வாயிலாக, இதுவரை காலத்துக்காக வழங்கப்பட வேண்டிய நிதித்திட்டங்களுக்கான அங்கீகாரத்தை நேரடியாக வடக்கு மாகாண சபையிடமிருந்தே பெற்றுக் கொள்வது. அதனால் எதிர்காலத்தில் இந்தக் கொடுப்பனவுகள் தொடர்பாக எழும் எக்கேள்விக்கும் தகுந்த பதில் அளிக்க முடியும் என்றும் கூறப்படுகின்றது.

ஆனாலும், நீதிமன்றத்தில் இடைக் கால உத்தரவினால், தமது அமைச்சுப் பதவிகளைச் சந்தேகத்துக்குள்ளதாகக் கொண்டிருக்கும் அமைச்சர்களுக்கு, இந்த நீதிமன்றின் இடைக்கால உத்தரவு வந்த பின்னரும் வழங்கப்பட்ட வேதனங்கள், கொடுப்பனவுகளுக்கு அந்தக் குறைநிரப்புப் பிரேரணை மூலம் அங்கீகாரம் அளிப்பதில்லை என்று தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் அறிய வருகின்றது.

நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவின் பின்னரும் ஐந்துக்கு மேற்பட்ட அமைச்சர்கள் பதவியில் இருக்கும் சூழ்நிலை நிலவுகின்ற போதும் – நீதிமன்றின் உத்தரவைக் கணக்கில் எடுக்காமல், அந்த அமைச்சர்களுக்குரிய வேதனங்களைச் செலுத்தியமைக்காகப் பொறுப்புள்ள சில அதிகாரிகள் Surchage செய்யப்பட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. - மின்னல் -

## அரசியல் கைதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் நேற்றுத் தாம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

கடந்த புதன்கிழமை சட்டமா அதிபர் நாட்டுக்குத் திரும் பிய உடனேயே பிரதமர் தலைமையில் ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. அதில் நீதி அமைச்சரும் பங்கேற்றிருந்தார்.

உணவு ஒறுப்பில் இருக்கும் அரசியல் கைதிகளின் நிலைவரம் தொடர்பில் நானும் சம்பந்தன் ஐயாவும் அவர்களுக்கு விளக்கமளித்திருந்தோம்.

உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்தும் அரசியல் கைதிகளை நேரில் சென்று அவர்களின் விவரங்களை நான் எடுத்த காரணத்தினால் ஒவ்வொருவருடைய வழக்கு விவரங்களையும் அரச தரப்புக்கு எடுத்துக் கூறினோம்.

இந்த அரசு பதவிக்கு வந்தபோது, அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் எடுத்துக் கொள்ளப்பட்ட இணக்கப்பாடு அடிப்படையிலே பலர் புனர்வாழ்வுக்கு அனுப்பப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று சட்டமா அதிபர் தெரியப்படுத்தினார்.

தற்போது நிலுவையிலுள்ள வழக்குகள் பாரதூரமான குற்றச்சாட்டுக்களை உடையவை என்றும் அவர் கூறினார்.

அவ்வாறான பாரதூரமான வழக்குகளை துரிமாக நடத்தி முடிப்பதற்காகதான் சிறப்பு நீதிமன்றங்கள் கொழும்பிலும் அநுராதபுரத்திலும் அமைக்கப்பட்டன. அநுராதபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு நீதிமன்றிலே வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்படவில்லை. அதனால்தான் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் தம்மை புனர்வாழ்வுக்கு அனுப்பியாவது விடுவிக்கக் கோரி இந்தப் போராட்டத்திலே ஈடுபட்டுள்ளனர்.

இந்த விடயங்களை நாம் எடுத்துக் கூறிய போது, உடனடியாக தாம் ஒரு விசாரணையை நடத்துவதாகச் சட்டமா அதிபர் குறிப்பிட்டார். அவர் விசாரணை நடத்துவதனால் அரசியல் கைதிகளுக்கு எந்தப் பலனும் கிட்டாது என்று அவர்களுக்கு நாம் கூறினோம்.

ஆகையினாலே 3 வருடங்களாக அவர்களின் வழக்குகளை இழுத்தடித்தமையால், அவர்கள் 10 வருடங்களுக்கு அண்மித்த காலத்தில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீது எந்தவொரு குற்றமும் நிரூபிக்கப்படாத காரணத்தினாலே அவர்களைப் புனர்வாழ்வுக்கு அனுப்பியாவது விடுவிக்கவேண்டும் என்று நாம் வலியுறுத்தினோம்.

இதுதொடர்பில் இரண்டு அல்லது மூன்று நாள்களிலே முடிவு சொல்வதாக சட்ட மா அதிபர் தெரிவித்திருந்தார்.

எனினும் நேற்றுடன் அந்த மூன்று நாள்கள் கடந்துவிட்டன. அதனால் இன்று (நேற்று) ஞாயிற்றுக்கிழமை காலை பிரதமருடன் தொலைபேசியில் உரையாடினேன். அது தொடர்பில் சட்டமா அதிபருடன் பேசி முடிவைச் சொல்வதாக அவர் பதிலளித்தார்.

இன்று (நேற்று) கொழும்புக்குத் திரும்புகின்றேன். கொழும்பு சென்றதும் அரசியல் கைதிகள் தொடர்பான அரசின் நிலைப்பாட்டைக் கேட்டறிந்து கொள்ளலாம்.

இவ்வாறு அரசியல் கைதிகள் ஒவ்வொருவருடைய வழக்குக் கோவைகளையும் ஆராய்ந்து அவர்களை விடுவிப்பதை விட அரசியல் தீர்மானம் ஒன்றை எடுத்து அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிக்கவேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அரச தரப்பிடம் எடுத்துக் கூறினார்.

அது சம்பந்தமாக நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நீதி அமைச்சருடைய அலுவலகத்திலே சட்ட மா அதிபரும் நானும் நீதி அமைச்சருடன் சந்திப்பு நடத்தவுள்ளோம்.

அரசியல் கைதிகள் ஒவ்வொரு வருடையவழக்குவிடயங்களையும்ஆராய்ந்து அவர்களை எவ்வாறு விடுவிக்க முடியும் என்று பரிசீலிப்பதற்காக இந்தச் சந்திப்பைக் கூட்டுகின்றோம்.

மேலும் அனைத்து அரசியல் கைதிகளின் விடுதலை தொடர் பிலும் நாம் அரச தரப்புடன் பேச்சு நடத்தினோம்.

'ஜனாதிபதியுடன் இது தொடர்பில் பேசியிருக்கின்றேன். அவர் நாடு திரும்பியவுடன் அரசியல் கைதிகள் விடயம் தொடர்பில் ஆராய்வதாகஉறுதியளித்தார். – என்றும் சம்பந்தன் கூறினார்.

ஜனாதிபதியுடன் பேசி அந்தக் கூட்டத்தை தான் ஒழுங்கு செய்வார் எனப் பிரதமர் தெரிவித்தார்.

அந்தச் சந்திப்பின் பிரகாரமே ஒரு அரசியல் தீர்மானத்தின் மூலம் அரசியல் கைதிகளை விடுவிக்க முடியும். 51 அரசியல் கைதிகள் வழக்கு முடிவடைந்து சிறைத் தண்டனை அனுபவிப்பவர்கள். ஜனாதிபதி மன்னிப்பு வழங்குவதன் ஊடாகவே அவர்கள் விடுதலை பெற முடியும்.

வடக்கு , கிழக்கு அபிவிருத்திச் செயலணி வரும் நாளை மறுதினம் புதன் கிழமை மாலை 3 மணிக்கு ஜனாதிபதி தலைமையில் கூடுகிறது. அதில் நாம் பல விடயங்கள் பற்றிப் பேசவுள்ளோம். அரசியல் கைதிகளின் விடுவிப்புத் தொடர்பிலும் நாம் ஜனாதிபதியுடன் பேசுவோம் – என்றார். (ஐ-7)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## தென்னிலங்கையின் அரசியல் குழப்பத்தின் உச்சக் கட்டத்தில்!

**யுத்தக் குற்றங்களுக்கு இலக்காகியிருக்கும் தனது முப்படையினரையும் காபந்து பண்ணும் திட்டம் ஒன்றை ஐ.நா. பொதுச் சபையில் பிரேரித்து, அதற்கு ஆதரவான சர்வதேச நிலைப்பாட்டைப் பெறுவதன் மூலம் உள்நாட்டில் தற்போது குறுகிவரும் தனது ஆதரவுத் தளத்தை மீளச் சரிபண்ணிப் பெருக்கிவிடலாம் என்ற எதிர்பார்ப்போடு – நப்பாசையோடு – நியூயோர்க் புறப்படத் தயாரான இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தமது அத்திட்டத்தை நகர்த்த முடியாத இக்கட்டு ஏற்பட்ட நிலையில், வெறுங்கையோடு இலங்கை மீண்டிருக்கின்றார்.**

**தடுப்புக் காவலில் எஞ்சியிருக்கும் விடுதலைப் புலிகளோடு சேர்த்து அனைத்துப் படையினருக்கும் ஒரேயடியாக பொது மன்னிப்பு என்ற திட்டத்தை அறிவிப்பதன் மூலம் யுத்தக் குற்றச்சாட்டுச் சர்ச்சையை ஒரேயடியாகக் குழி தோண்டிப் புதைத்துவிடலாம் என்ற அவரது உத்தேசத் திட்டம், அது வெளியிடப்படுவதற்கு முன்னரே உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் கிளம்பிய கடும் எதிர்ப்புக் காரணமாகக் கைவிடப்பட வேண்டியதாயிற்று.**

**முப்படையினரையும் யுத்தக் குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கும் பொறிமுறை ஒன்றை ஐ.நா. பொதுச் சபையில் வெளியிடுவேன் என்று முன்னறிவித்தல் கொடுத்த ஜனாதிபதி மைத்தரிபால சிறிசேன, அந்த விடயம் குறித்து அங்கு வாய் திறக்காமல், வாலைச் சுருட்டிக் கொண்டமைக்கு மேற்படி சர்வதேச மட்டங்களில் இருந்து அத்திட்டத்துக்குக் கிடைத்த கடும் ஆட்சேபம்தான் – சீற்றத்துடனான எதிர்ப்புத்தான் –பிரதான காரணம் என்று விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.**

**இப்போது நாடு மீண்டிருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இனி காத்திரமான – கடுமையான – அரசியல் நடவடிக்கைகளையும் நகர்வுகளையும் முன்னெடுப்பார் என்று முக்கிய ஆங்கில வார இதழ் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.**

**கடந்த மூன்றரை வருடங்களுக்கு மேலாக பெரும் இழுபறிக்கு மத்தியில் நீடித்து வரும் – ஐக்கிய தேசியக் கட்சி முதன்மை பங்கு வகிக்கும் – நல்லாட்சி அரசில் தமது தலைமையிலான சுதந்திரக் கட்சியின் பங்கு, பணி மற்றும், ஐ.தே.கவுடனான உறவு நிலை ஆகியன குறித்து ஜனாதிபதி தீவிரமாகப் பரிசீலித்துப் பல முடிவுகளை எடுப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.**

**இதேசமயம், நல்லாட்சி அரசில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையிலான உறவு நிலைமை மிகவும் மோசமடைந்து வருகின்றது என அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.**

**பிணைமுறி விவகாரத்தில் சிக்கி, விளக்கமறியலில் இருந்தபடி விசாரணையை எதிர்நோக்கி வரும் வர்த்தகப் பிரமுகர் ஒருவரின் கம்பனியில் இருந்து பிரதமருக்குப் பெரும் தொகைப் பணம் கையூட்டாக வழங்கப்பட்டது என்று, கைதியாக இருக்கும் அந்த வர்த்தகப் பிரமுகரைக் கொண்டே ஓர் ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதற்கு சட்டமா அதிபர் திணைக்களத் தரப்பில் வலிந்து முயற்சிகள் எடுக்கப்பட்டன என வெளியான – கசிந்த – செய்திகளால் பிரதமர் அலுவலகம் பெரும் குழப்பத்திலும், கொதிப்பிலும் இருப்பதாகத் தெரிகின்றது.**

**நாடு திரும்பியுள்ள ஜனாதிபதி முக்கியமாக எடுக்கவுள்ள நடவடிக்கைகளுள் ஒன்று அமைச்சரவை மாற்றம் என்றும் கூறப்படுகின்றது.**

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்து வாக்களித்தையை அடுத்து எழுந்த நெருக்கடி காரணமாக அமைச்சுப் பதவியை இழந்த 1G சு.க.வினரில் ஒருவரான தயாசிறி ஜயசேகராவுக்கு மீண்டும் அமைச்சுப் பதவி வழங்கப்படலாம் எனத் தெரிகின்றது. அதனால் ஐ.தே.கட்சிக்குள் கிளம்பக்கூடிய எதிர்ப்பலைகளைச் சமாளிப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மிகவும் நெருக்கமானவரும், அக்கட்சியின் மூத்த பிரமுகருமான ரவி கருணாநாயக்காவுக்கும் அதேசமயத்தில் மீள அமைச்சுப் பதவி கிட்டும் எனவும் தெரிகின்றது.**

**எது, எப்படியென்றாலும், நல்லாட்சி அரசிற்குள் பிரதான இரு தரப்புகளான ஐ.தே.கவுக்கும் சு.கவுக்கும் இடையிலான புகைச்சல் வரவரத் தீவிரமடைந்து வருவது தெளிவு.**

**இந்த ஜனாதிபதியின் பதவிக் காலம் அடுத்த ஆண்டு நவம்பர் வரை உள்ளது. அதுவரை கூட நல்லாட்சி அரசு நீடித்துத் தப்பிப் பிழைக்குமா என்பது கேள்விக்குறிதான் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.**

**இந்த அரசைப் பொறுத்தவரை இது இறங்கு காலம்; சரிவு வேளை.**

**ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையிலான முரண்பாடுகள், கூட்டரசின் பங்காளிக் கட்சிகளான ஐ.தே.கவுக்கும் சுதந்திரக் கட்சிக்கும் இடையில் முற்றி வரும் கருத்து வேறுபாடுகள் போன்றவை விரைவில் பெரும் அரசியல் பிரளயமாக வெடிக்கக்கூடிய ஏதுநிலைகள் காணப்படுகின்றன.**

**இதனால், தென்னிலங்கையில் திடீர் அரசியல் நிலை மாற்றங்கள் திடுதிப்பென வரலாம் என்று நம்பலாம்.**

# அரசியல் கைதிகள் விடயத்தை இழுத்தடித்து காலம் கடத்தாதீர்!

## அரசிடம் கோருகிறார் சரவணபவன் எம்.பி.



கொழும்பு, ஒக்.01

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான ஒவ்வொரு முயற்சியின்போதும் ஒவ்வொரு காரணம் கூறப்பட்டு நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டுக்கொண்டு வருன்றமையை நாம் அவதானிக்க முடியும். ஆனால், உண்ணாவிரதக் கைதிகள் ஒவ்வொரு நிமிடமும் சாவைநோக்கிநகர்ந்துகொண்டிருக்கின்றார்கள். காலதாமதம் செய்யப்படும் ஒவ்வொருநாளும் அவர்கள் சாவை நோக்கித் தள்ளப்படும் நாளே.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டம் தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளவை வருமாறு:–

பயங்கர வாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு அநுராதபுரத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தங்களை மன்னிப்பின் கீழ் விடுவிக்கும்படி அல்லது குறுகிய கால புனர்வாழ்வு வழங்கி விடுதலை செய்யுமாறு தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். கடந்த 9 ஆண்டுகளுக்கு மேலாக இவர்கள் எவ்வித குற்றச்சாட்டும் சுமத்தப்படாமலும் நீதிமன்ற விசாரணைக்கும் உட்படுத்தப்படாமலும் உள்ள நிலையில் சிறைவாசம் அனுபவித்து வருகின்றனர்.

தமிழ் அரசியல் கைதிகள் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டங்களை நடத்துவது இதுதான் முதல் தடவையல்ல. ஒவ்வொரு முறையும் அவர்கள் உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்துவதும் அவர்களின் போராட்டங்கள் தொடர்பாக அலட்சியப் போக்கைக் காட்டுவதும் அவர்கள் சாவின் விளிம்பை அடையும் நிலையில் சில வாக்குறுதிகளை வழங்கிப் போராட்டங்களை நிறுத்திவிட்டுப் பின்பு வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் விடுவதும், அதற்கும் சட்டக் காரணங்களை முன்வைப்பதும் தொடர்ந்து நடைபெறும் சம்பவங்களாக உள்ளன.

இந்தக் கைதிகள் பயங்கர வாதத் தடைச் சட்டத்தின் கீழேயே கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இச்சட்டம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் நியமங்களுக்கு விரோதமானது எனவும் அது நீக்கப்பட வேண்டும் எனவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இலங்கையும் அதற்கு இணங்கியிருந்தது. இணக்கம் காணப்பட்டு நான்கு ஆண்டுகள் நெருங்கும் போதும் அந்த மனிதகுல விரோதச் சட்டம் நீக்கப்படவில்லை.

அதுமட்டுமின்றி தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதும் இலங்கை அரச தரப்பால் நீக்கப்படவுள்ளதாக ஒப்புக்கொள்ளப்பட்ட பயங்கர வாதத் தடைச் சட்டத்தின் கீழ்தான். கைதிகள் விடுதலை தொடர்பாகப் பிரச்சினைகள் முன்வைக்கப்படும் போது இந்தச் சட்டமே காண்பிக்கப்படுகின்றது. அரசியல் கைதிகள் விவகாரம் நியாயத்தின் அடிப்படையில் நோக்கப்படாமல் இனக்குரோத அடிப்படையிலேயே நோக்கப்படுவதாக நாம் கருதுகின்றோம்.

ஒரு ஜனநாயக நாட்டுக்கு –ஐக்கிய நாடுகள் மனித உரிமை

(13 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக தமிழ் – முஸ்லிம் எம்.பிக்கள் ஒன்றிணைவோம்!

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. அழைப்பு

வவுனியா,ஒக்.01

அரசியல் கைதிகளின் விடுதலைக்காக வடக்கு, கிழக்கு மற்றும் மலையக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும், சகோதர முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒன்றிணையுமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அழைப்பு விடுத்துள்ளார்.

வவுனியாவில் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள சத்தியாகிரகப் போராட்டம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

அனுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருக்கும் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நாளை திங்கள் கிழமை இரண்டாவது தடவையாக பெரும் சத்தியாக்கிரகப் போராட்டம் வவுனியாவில் நடைபெறவுள்ளது. பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் எனப்பலரும் இதற்கு தமது ஆதரவை வழங்கியுள்ளனர்.

இந்த அரசியல் கைதிகளின் நிலைமை ஒவ்வொரு மணிநேரமும் மிகவும் மோசமான கட்டத்தை அடைந்து கொண்டிருக்கின்றது.

இந்த அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக இதுவரை ஜனாதிபதி, பிரதமர், சட்டமா அதிபர் ஆகியோர் உருப்படியான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமல் வெறுமனே, சட்டமா அதிபருடன் பேச வேண்டும் அல்லது நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள அரசியல் கைதிகளின் வழக்குகளை கவனிக்க வேண்டும் என்று சாட்டுப் போக்குகள் சொல்லப்படுகிறதே தவிர, இவர்களுடைய விடுதலை தொடர்பாக காத்திரமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இது உண்மையில் அரசியல் ரீதியான பிரச்சினை. அரசியல் ரீதியாகத் தான் தீர்வு காணப்பட வேண்டும். ஆகவே அரசியல் ரீதியாக தீர்வு காணும் விடயத்திற்கு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதற்கு வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் இருக்கக் கூடிய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முஸ்லிம் சகோதர நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து காத்திரமான முறையில் குரல் கொடுக்க வேண்டியுள்ளது.

இன்னும் சொல்லப்போனால் இந்த அரசியல் கைதிகளுக்கு விடுதலை கிடைக்கும் வரைக்கும், நாடாளுமன்றத்தை புறக்கணிப்பதற்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். தமிழ், முஸ்லிம் மக்களின் பேராதரவுடன் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் 12 ஆயிரம் பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஆனால் தற்போது ஜனாதிபதி, பிரதமரால் 130 இற்கு உட்பட்ட தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய முடியாமல் இருக்கிறது. இந்தநிலையில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பொதுச் சபையில் ஜனாதிபதி உரையாற்றும் போது இலங்கைப் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை, இது உள்நாட்டில் தீர்வு காணப்பட வேண்டும், இந்தப்பிரச்சினையை ஒரு புதிய கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டும் என்று கேட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் போர்குற்றம், மனிதவுரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா மனிதவுரிமை பேரவையில் இலங்கை அரசாங்கம் இணை அனுசரணை வழங்கிய வாக்குறுதிகள் எவையுமே நிறைவேற்றப்படவில்லை.

இவ்வாறான நிலையில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசைப் பாதுகாத்துக் கொண்டும், முண்டு கொடுத்துக் கொண்டும் இருக்காமல் காத்திரமான நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திற்கு கடுமையான அழுத்தம் கொடுக்க வேண்டும்.

அரசியல் கைதிகளை விடுவிக்கும் வரைக்கும் நாடாளுமன்றத்தை புறக்கணிக்க வேண்டும். அதைவிடுத்து மக்களை ஏமாற்றுவதற்காக ஜனாதிபதி, பிரதமர் எங்களை ஏமாற்றிவிட்டார்கள் எனக் கூறாது காத்திரமாகச் செயற்பட வேண்டும்.

ஆகவே, அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நடைபெறும் போராட்டத்திற்கு அனைவரும் ஆதரவு தெரிவிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன் – எனத் தெரிவித்தார்.

(இ–100)

### நாளை

02.10.2018
செவ்வாய்க்கிழமை

நட்சத்திரம்: திருவாதிரை மு.இ.10.57 வரை
திதி: அட்டமி பி.இ. 12.34 மணி வரை

சுபநேரம் : 10.32 – 12.02 வரை
இராகுகாலம் : 03.02 – 4.32 வரை

# ஜனாதிபதி மைத்திரியின் ஆட்சியில்தான் விவசாயத்துறைக்கு கூடுதல் நிதியொதுக்கீடு

## அமைச்சர் மஹிந்த அமரவீர சுட்டிக்காட்டு



இந்த நாட்டின் வரலாற்றில் விவசாயத் துறைக்கு அதிகளவான நிதியொதுக்கீடு கள் மேற்கொள்ளப்பட்டது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியில் தான் என்பதை தான் பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இறக்குமதியை நிறுத்தி ஏற்றுமதியை அதிகரிக்கும் வகையில் விவசாயத்துறையை நவீனமயப்படுத் தும் நடவடிக்கைகள் தற்போது முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ் சிக்குடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட் பட்ட களுதாவளை பகுதியில் விவசாய செய்கையில் நவீன முறையிலான நீர் வழங்கல் முறை மற்றும் வீதி அபிவி ருத்தி, கால்வாய் புனரமைப்பு பணிகள் நேற்றுமுன்தினம் காலை ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இதம்போது உரையாற்றுகையில் அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் தெரிவித்தவை வருமாறு –

இந்த நாட்டின் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன விவசாயத்துறையை கட்டியெழுப்புவதற்காக கூடுதலான நிதி யை எங்களுடைய அமைச்சுக்கு வழங் கிவருகின்றார்.

இந்நாட்டில் விவசாயத்துறைக்கு அதி களவான நிதியைப் அள்ளி வழங்கிய ஒரேயொரு ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன தான் என்பதை பயமின்றி உறுதி யாக என்னால் கூறமுடியும்.

நாங்கள் அண்மையில் விசவாயிக ளுக்கான காப்புறுதி ஒன்றை அறிமுக படுத்தியிருக்கின்றோம். விவசாயி களிட மிருந்து எந்தவித அறவீடுமின்றி காப்புறுதி யினை பெற்றுக்கொடுப்பதற்கான வேலைத்திட்டத்தை முன்னெடுத்திருக் கின்றோம்.

நெல், பெரியவெங்காயம், மிளகாய், சோயாபோஞ்சி, சோளன், உருளைக் கிழங்கு போன்ற உற்பத்திகளுக்கும் காப் புறுதித் திட்டங்களை கொண்டு வந்தி ருக்கின்றோம்.

மிளகாய் செய்கையின்போது ஏற்ப டும் நட்டத்திற்கு ஏக்கருக்கு ஒரு லட்சம் ரூபா வீதம் நட்டஈடு வழங்க எங்களு டைய அமைச்சு மூலம் நடவடிக்கை களை முன்னெடுத்திருக்கின்றோம் என் றும் அவர் தெரிவித்துள்ளார்.

# இத்தாலியில் மன்னார் ஆயர்!



மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு. இம்மானுவேல் பெர்னாண்டோ இத்தாலிக்கு பயணம் செய்துள்ளார்.

இத்தாலியின் பலெர்மோ ஆன்மீகத் தளத்தைச் சார்ந்த 35 பிள்ளைகளுக்கு உறுதிப்பூசுதல் திருவருட்சாதனம் வழங் கும் பொருட்டு அவர் அங்குச் சென்றுள் ளார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் காலை பலெர்மோ மறை மாவட்ட பேராயர் மேதகு கொறாதோ லொறபிச்சேயைச் அவர் சந்தித்துள்ளார்.

பலெர்மோ மறைமாவட்ட பேராலயத் தையும் பலெர்மோ மறை மாவட்ட முத்திப் பேறுபெற்ற பினோ புலிசியின் கல்லறை யையும் தரிசித்துள்ளார்.

# ஜனாதிபதி தேர்தல் களத்தில் ஞானசார தேரரும் குதிப்பார்?

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொதுபல சேனாவின் பொதுச் செய லாளர் ஞானசார தேரர் போட்டியிட உள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

நீதிமன்ற அவதூறு குற்றச்சாட் டில் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் ஞானசார தேரருக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டால், அவரை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடச் செய்ய 2 முக்கிய அமைச்சரவை அமைச்சர்கள் முயற்சித்துவருகின்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், ஜனாதிபதி தேர்தல் நெருங்கும்போது, ஞானசார தேரருக்கு பொது மன்னிப்பு வழங்குமாறு இந்த அமைச்சர்கள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவிடம் கோரிக்கை விடுக்க உள்ள னர் என தெரியவருகிறது.

அதன் பின்னர் ஞானசார தேரர் அல்லது பொதுபல சேனாவிலிருந்து



வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதி வேட் பாளராக களமிறக்குவதற்கு திட்டமிடப் பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு கிடைக்கக்கூடிய சிங் கள, பௌத்த வாக்குகளை சிதைவ டையச்செய்யும் நோக்கில் இந்த முயற்சி எடுக்கப்பட உள்ளது எனத் தெரிவிக்கப் படுகிறது.

எனினும் இந்த திட்டத்திற்கு ஞான சார தேரர் இதுவரையில் இணக்கம் தெரிவிக்கவில்லை என்பது குறிப் பிடத்தக்கது.

இதேவேளை, பொது மன்னிப்பு வழங்கப்பட்ட எந்தவொரு பிரஜையும் தேர்தலில் போட்டியிட முடியும் எனவும், அதற்கு தடை கிடையாது எனவும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீட சிரேஷ்ட விரிவுரையாளர் பிரதீபா மஹானாமஹேவா தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா, எஸ்.பி.திஸா நாயக்க போன்றவர்கள் ஜனாதிபதி யின் பொது மன்னிப்பின் பின்னர் தேர்தலில் போட்டியிட்டனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மட்டக்களப்பு பிரதேச சபையினரால் நாமலுக்கு அமோகமான வரவேற்பு

மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு நேற்றுமுன்தினம்சென்றிருந்தநாடாளு மன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வுக்கு மட்டக்களப்பு பிரதேச சபையின ரால் அமோக வரவேற்பளிக்கப்பட் டுள்ளது.

சிறைச்சாலையில் இருக்கும் கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச் சர் சிவனேசதுரை சந்திரகாந்தனை நேரில் சென்று நாமல் ராஜபக்ஷ பார் வையிட்டிருந்தார்.

இதன்போதே மட்டக்களப்பு பிரதேச சபையினரால் நாமல் ராஜபக்ஷவுக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டுள்ளது.

# மின் தடை

யாழ்ப்பாணம் செப். 29

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங் களின் கட்டமைப்பு மற்றும் பராம ரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**வவுனியா பிரதேசத்தில் -**

தவசிக் குளம் கிராமம், தவசிக் குளம் பிள்ளையார் வீதி, அண்ணா நகர், சிறீநகர், பூந்தோட்டம் கைத் தொழிற்பேட்டை ஆகிய இடங்களி லும் –

**மன்னார் பிரதேசத்தில் -**

மணல்குளம், இலந்தை மோட்டை, சூரியகட்டைக்காடு, கூரை, அகத்திமோட்டை, சேதுவிநாய கங்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம்தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# யாழிலிருந்து கதிர்காமம் சென்ற பஸ் இரவில் வழிமறித்து திடீர் சோதனை!

## கஞ்சாவுடன் நபரொருவர் சிக்கினார்

வவுனியா, ஒக். 01

யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமம் நோக்கிசென்ற பஸ்ஸை வழிமறித்து பொலி ஸார் திடீர் சோதனை செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலொன்றின் அடிப்படையிலேயே நேற்று முன்தினம் இரவு இந்த சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது இந்த பஸ்ஸில் கேரளா கஞ்சாவை கடத்தி சென்ற நபர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பஸ் நொச்சிமோட்டை பகுதியில் வழி மறித்து சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அதன்போது, சம்பவம் தொடர்பில் மொனரா கலையைச் சேர்ந்த விஜித பண்டார என்ப வரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது சந்தேகநபரிடம் இருந்து 2 கிலோகிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டுள் ளதுடன், அவர் மேலதிக விசாரணைகளின் பின் இன்று வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட வுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மது போதையில் பெண் மருத்துவர்; அவரின் கார் மோதி இன்ஸ்பெக்டர் பலி!

கொழும்பு – பொரல்லஸ்கமுவ பிர தேசத்தில் நடந்த வாகன விபத்தில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் உயி ரிழந்தமையுடன், மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

கொல்லப்பட்ட பொலிஸ் இன்ஸ்பெக் டர் கொழும்பில் உள்ள பொலிஸ் தலை மையகத்தில் கடமையாற்றி வந்துள் ளார்.

இவர்கள் பயணித்த வாகனத்துடன் பெண் மருத்துவர் ஒருவர் செலுத்தி வந்த கார் மோதியுள்ளது. சம்பவத்தில் காயமடைந்த மருத்துவரும் வைத்தி யசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பெண் மருத்துவர் மது அருந்தியி ருந்தமை பொலிஸார் மேற் கொண்ட சுவாச பரிசோதனையில் தெரியவந் துள்ளது.

# இலங்கையில் வாகனங்களின் விலை மிக வேகமாக அதிகரிப்பு!

கொழும்பு, ஒக்.01

இலங்கையில் கடந்த காலங்களை விடவும் வாகனங் களின் விலை மிகவும் வேகமான முறையில் அதிகரித்து வருகின்றது.

இதற்கு முன்னர் தீர்வை வரி உட்பட பல வரிகள் காரண மாக வாகனங்களின் விலைகளில் அதிகரிப்பு நிலை ஏற் பட்டது. தற்போது ரூபாயின் வீழ்ச்சி காரணமாக வாகனங் களின் விலை மீண்டும் அதிகரித்துள்ளது.

அதற்கமைய மீண்டும் 3 முதல் 8 லட்சம் ரூபா வரையில் வாகனங்களின் விலை அதிகரித்துள்ளது.

டொலருக்காக செலுத்தப்படும் ரூபாவின் தொகை அதிகரிக்கப்படுகின்றமையால் இந்த நிலை ஏற்பட்டுள் ளது என குறிப்பிடப்படுகின்றது.

அதற்கமைய டொயோட்டா எக்சியோ வாகனம் ஒன்று 8 லட்சம் ரூபாயில் அதிகரித்துள்ள நிலையில் சுசுகி வெகன் ஆர் வாகனம் 3 லட்சம் ரூபாயில் அதிகரித்துள்ளது. அதற்கு சமமாக ஏனைய வாகனங்களின் விலைகளும் அதிகரித் துள்ளன எனக் கூறப்படுகிறது.

காந்தியடிகளின் பிறந்தநாள்:

# யாழ்., பருத்தித்துறையில் சிலைகளுக்கு நாளை மாலையிட்டு அஞ்சலி நிகழ்வுகள்

மகாத்மா காந்தியடிகளின் 149ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு அகில இலங்கை காந்தி சேவா சங்கம் மற்றும் யாழ். இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் நாளை செவ்வாய்க்கிழமை காலை வடக்கு மாகாணத்திலுள்ள நான்கு இடங்களில் காந்திக்கு அஞ்சலி செலுத்தப் படவுள்ளது.

காந்தியடிகளின் திருவுருவச் சிலைகள் அமைந்துள்ள யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி, அரியாலை காந்தி சனசமூக நிலையம், பருத்தித்துறை நகரம், முல்லைத்தீவு ஆகிய இடங்களில் அடிகளாரின் சிலைகளுக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெறும்.

தொடர்ந்து யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் பன்னாட்டு அகிம்சை தின சிறப்பு நிகழ்வும் காந்தியின் 150 ஆவது பிறந்த நாள் தொடக்க விழாவும் முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக் கப்பட்டுள்ளது.



# தினசரி ராசி பலன் (01.10.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் புரட்டாதித் திங்கள் 15 ஆம் நாள். திங்கட்கிழமை. ஸப்தமித் திதி பின்னிரவு 4.09 வரை பின்னர் அஷ்டமி. நட்சத்திரம்: மிருகசீரிடம் இரவு 12.51 பின்னர் திருவாதிரை அமிர்தசித்தயோகம் முழுவதும் .

**ராகுகாலம்** - காலை 7.30 மணி முதல் 9.00 மணி வரை.

**சுபநேரம்** - பகல் 12.02 மணி முதல் 01.32 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - புரட்டாதி மாத தேய்பிறை ஸப்தமி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - மிருகசீரிடம்

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**


**மேஷம்**
மத்திமமான நாள். பொருளாதரம் மத்திமமாக இருக்கும் அளவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். தேகசுகக் குறைவு உண்டாகும். மருத்துவ செலவுகள் ஏற்படும். தொழில் பிரயாசை அதிகரிக்கும். எண்ணிய காரியம் தாமதமாகும்.


**ரிஷபம்**
ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். எடுக்கும் முயற்சிகள் வெற்றியைத் தரும். உறுதியான முடிவுகள் எடுத்து செயற்படுவார்கள். தொழில் முன்னேற் றம் காண்பார்கள்.


**மிதுனம்**
யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். மனதில் உற் சாகமும் உடலில் சுறுசுறுப்பும் ஏற்படும். அரசு வழிக் காரியங்கள் நன்மையாக முடியும். தூரதேசப் பயணம் சிலருக்கு அனுகூலமாகும். வீடு வாகன வசதிகள் பெருகும்.


**கடகம்**
சஞ்சலமான நாள். பணப்பற்றாக்குறையாக இருக்கும். மனதில் யோசனை, கவலை அதிகரிக்கும். புதிய தொழில் இடையூறுகள் உண்டாகும். தாயாரின் உடல்நிலை பாதிப் படையும். எடுக்கும் முயற்சிகள் தடை தாமதமாகும்.


**சிம்மம்**
சிங்கராசியினருக்கு உயர்வான நாள். பொருளாதாரம் உயர் வடையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். சகோதர வழி யால் நன்மைகள் உண்டாகும். வியாபாரத்தில் வெளிநாட்டுப் பொருள்களுக்கு வாடிக்கையாளர் வருகை அதிகரிக்கும்


**கன்னி**
சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாரா இருக்கும். தேவையற்ற வீண் செலவுகள் உண்டாகும். உத்தியோகத்தர்களின் எதிர்பார்ப்பு தாமதமாகும். ஆடம்பர பொருள்களால் புதிய செலவு வரும்.



**துலாம்**
அதிர்ஷ்டமான நாள். பணம் பல வழிகளாலும் வந்து சேரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உத்தியோக உயர்வு கள் கிடைக்கும். தாய் வழிச்சொத்துக்கள் வந்துசேரும். திருமண காரியங்கள் மளமளவென்று ஒப்பேறும்.


**விருச்சிகம்**
கவலையான நாள். தன வரவு குறையும். குடும்பத்தில் வீண் பிரச்சினைகள் உண்டாகும். பெண்களிடம் எச்சரிக் கையாக இருப்பது நல்லது. கொடுக்கல் வாங்கலில் மந்த நிலை ஏற்படும். உறவினர் நண்பர்கள் தொல்லை தருவர்.


**தனுசு**
மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமா ராக இருக்கும். அளவுக்கு மீறிய செலவுகளால் கடன்படும் நிலை உண்டாகும். தேகசுகம் குடும்ப சுகம் ஓரளவு சுமா ராக இருக்கும். வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டாகும்.


**மகரம்**
இனிமையாக நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் இனிமையான சூழல் நிலவும். புதிய ஆடை ஆபரணப்பொருள்கள் வந்து சேரும். வீட்டில் சுபகாரியம் நடக்கும். சகோதர உதவிகள் கிடைக்கும்.


**கும்பம்**
ஆக்கபூர்வமான நாள். வருமானம் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியவாறு இருக்கும். குடும்ப உறவு அன்புடைய தாக இருக்கும். அரசு வழிச் செல்வாக்கும் திறமையால் முன்னேற்றம் கிடைக்கும்.


**மீனம்**
அலைச்சல் மிகுந்தநாள். பணப் பற்றாக்குறையாக இருக் கும். செலவுகளைச் சமாளிக்க முடியாமல் கடன் வாங்க அலைவார்கள். சிலர் சொந்தத் தொழில் தொடங்குவதற்கு வங்கிகளின் உதவியை நாடுவார்கள்.

**சந்திராஷ்டம நாள்: சித்திரை 3ஆம், 4ஆம் பாதங்கள், சுவாதி, விசா கம் அனுஷம், கேட்டை ஆகிய நட்சத்திரங்களின் பிறந்தோர் சுப கரு மங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# 8 மாதங்களில் 1890 பேர் வீதி விபத்துக்களில் பலி!

கொழும்பு,ஒக.01

இலங்கையில் கடந்த 8 மாதங்களில் 1890 பேர் வீதி விபத்துக்களில் உயிரிழந்துள்ளனர் என பொலிஸ் தலை மையகம் தெரிவித்துள்ளது.

இந்த எண்ணிக்கையில் 570 பேர் பாதசாரிகளாகவும் 638 பேர் மோட்டார் சைக்கிளில் சென்றவர்களாகவுமே உள்ளனர்.

அத்துடன், கடந்த 8 மாதங்களில் மோட்டார் வாகனத் தில் பயணித்த 123 பேர் , சாரதிகள் 151 பேர் , பயணிகள் 259 பேர், சைக்கிளில் பயணித்த 144 பேர் என மொத்த மாக 1890 பேர் உயிரிழந்துள்ளனர்.

# ஜா-எல பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பெண் பலி!

கொழும்பு,ஒக.01

ஜா-எல, வெலிகம்பிட்டிய பகுதியில் இடம்பெற்ற துப் பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் 40 வயது பெண்ணொரு வர் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த இந்தப் பெண் ராகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள் ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் வாகனத்தில் சென்ற இந்த பெண் மீது இனந் தெரியாத ஒருவரினால் துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

# கேகாலையை சுற்றுலாப் பயணிகளை கவரக்கூடிய மாவட்டமாக மேம்படுத்த திட்டம்!

கேகாலை,ஒக்.01

கேகாலை மாவட்டத்தை சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய மாவட்டமாக மேம்படுத்துவதற்கான திட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவின் தலைமை யில் உத்தேச நகரத்திற்கான அடிக்கல் நடப்பட்டுள்ளது. கேகாலை பெருந்தோட்ட நிறுவனத்திற்குச் சொந்தமாக கலிகமுவ - அட்டாளைத் தோட்டத்தில் இந்த நகரம் அமை க்கப்படவுள்ளது.

முதல் கட்டத்தின் கீழ் இரண்டு கோடியே 50 லட்ச ரூபா இதற்காக செலவிடப்படவுள்ளது. தொழில் முயற்சியாளர் களின் உற்பத்திக்கான சந்தை வாய்ப்பும் ஏற்படுத்தித் கொடுக்கப்படவுள்ளது.

# கட்டாக்காலி மாடுகளின் தொல்லை; மடக்கிப் பிடிக்க பொலிஸாரும்!

மட்டக்களப்பு,ஒக்.01

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி மாடுகளை பிடிக்கும் நடவடிக்கை களை மண்முனை தென் எருவில் பற்று பிரதேசசபை யுடன் இணைந்து களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற் கொண்டனர்.

நேற்று முன்தினம் இரவு மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் மேற்கொள்ளப்பட்ட திடீர் நடவடிக்கை யின்போது 10 மாடுகள் பிடிக்கப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளன.

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் அதிகளவான விபத்துகள் இந்த கட்டாக்காலி மாடுகளால் ஏற்படுகின்றன என களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த ஆண்டு தொடக்கம் இது வரையில் கட்டாக்காலி மாடுகளினால் 40 இற்கும் மேற்பட்ட விபத்துகள் இடம் பெற்றுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

# சுனாமி எச்சரிக்கை ஏதும் இல்லை; வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு

இலங்கைக்கு எவ்வித சுனாமி எச்சரிக்கைகளும் இல்லை என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுனாமி ஆபத்து உள்ளதாக பரவும் கட்டுக்கதைகளில் எவ்வித உண்மைகளும் இல்லை என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கடற்கரைப் பிரதேசங்களில் வாழும் மக்கள் போலித் தகவல்களை நம்ப வேண்டாம் என திணைக்களம் வெளி யிட்டுள்ள விசேட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுனாமி ஆபத்துக்கள் ஏற்படுமா என்பது தொடர்பில் தொடர்ந்தும் கண்காணிக்கப்பட்டு வருகிறது என திணைக் களம் மேலும் தெரிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இந்தோனேஷியாவில் ஏற் பட்ட பெரும் பூகம்பத்தை அடுத்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இந்த அனர்த்தம் காரணமாக 400 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக் கது.

தமிழக சுவாமிகளின்

# திருவாசக இசை சொற்பொழிவு நாளை நாவற்குழியில்!



யாழ்ப்பாணம்,ஒக்.01

தமிழகத்தைச் சேர்ந்த தவத்திரு அரிகர தேசிக சுவாமிகள் வழங்கும் திருவாசக இசைச் சொற்பொழிவு நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு ஏ9 வீதி நாவற்குழி திரு வாசக அரண்மனையில் இடம் பெறும்.

விழா ஏற்பாட்டாளர்கள் அனை வரையும் அன்புடன் அழைக்கின்ற னர். (இ

# மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் இன்று ஆசிரியர் தின விழா

மூளாய்,ஒக்.01

மூளாய் சைவப்பிரகாச வித்தி யாலய ரதிதேவி மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு உலக ஆசிரியர் தின விழா பழைய மாணவர் சங்க உபதலைவர் க.பாலச்சந்திரன் தலைமையில் இடம்பெறும்.

விழா நிகழ்வில் பிரதம விருந்தி னராக ஓய்வுநிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஸ்ரீ விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக கலாபூஷ ணம் செ.சிவசுப்பிரமணியம், ஓய்வு நிலை ஆசிரியரும் பழைய மாண வருமான க.மனோகர், ஆகியோரும் கௌரவ விருந்தினராக மூளாய் இந்து இளைஞர் மன்றத் தலைவர் சி.யனார்த்தனனும் கலந்துகொள் வர். (இ

# கோண்டாவில் சி.சி.த.க.வில் சிறுவர் - முதியோர் தின நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம்,ஒக்.01

யாழ். கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலை சிறுவர் முதியோர் தின விழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி சிவராணி நந்த குமார் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் ஜயூப் அஸ்மினும் சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலய சேவைக்கால ஆலோசகர் மேரி திரேசா மரிய நாயகமும் கௌரவ விருந்தினராக வர்த்தகர் தி.றமேஸ்கரன் - கிரிஜா தம்பதியினரும் கலந்துகொள்வர்.

முதியோர்களான செல்லையா சின்னத்துரை, கிருஷ்ணபிள்ளை சின்னத்தங்கச்சி ஆகியோர் கௌர வம் பெறவுள்ளனர். (இ

# பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் புரட்டாசி சனி வழிபாடுகள்!

கொழும்பு, ஸ்ரீ பொன்னம் பலவாணேஸ்வரர் ஆலயத்தில் இரண்டாம் புரட்டாசி தின நிகழ்வுகள் சிறப்பாக நடை பெற்றுள்ளன.

புரட்டாசிமாதத்தின் இரண்டாவது சனிக்கிழமை விரதத்தை முன் னிட்டு நேற்றுமுன்தினம் இந்த ஆலயத்தில் விஷேட வழிபாடுகள் இடம்பெற்றுள்ளன.

இதில் பொது மக்கள் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப் பிடத்தக்கது.

# அரச வங்கிகளின் அதிகாரிகளுக்கு நிதி அமைச்சர் மங்கள எச்சரிக்கை



மாத்தறை, ஒக். 01

என்டப்பிரைசஸ் ஸ்ரீ லங்கா அபிவிருத்தித் திட்டத்துக்கு ஆதரவு வழங்காத அரச வங்கி அதிகாரிகளுக்கு கடுமையான சட்ட நடவடிக்கையெடுக்கப்படுமென நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மாத்தறை பௌத்த விகாரையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

தொழில்துறையில் புதிதாக ஈடுபடுவோருக்கு அரசு முன்வைத்துள்ள கடன் திட்டத்தை உரிய முறையில் வழங்குவதில் அரச வங்கி பின்வாங்குகிறது என இந்த நிகழ்வில் கலந்துகொண்ட தொழிலாளர்கள் அமைச்சரிடம் முறையிடப்பட்ட போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வங்கியில் புதிதாக கடன் பெற வரும் இளைஞர், யுவதிகளை கடன் வழங்காமல் திருப்பியனுப்பவே வங்கி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கின்றனர். அவசியமற்ற கேள்விகளை தொடுத்து அவர்களை திருப்பி அனுப்பி விடுகின்றனர்.

அரசு முன்வைத்துள்ள இந்த புதிய கடன் திட்டத்தில் 15 லட்சத்துக்கு குறைவாக கடன் பெறுபவர்களுக்கு யாரும் பிணை நிற்கத் தேவையில்லை. எந்த வங்கியிலாவது அவ்வாறு கோருவதாயின் எமக்கு அறிவியுங்கள். அவ்வாறு கேட்டவரின் பெயர், வங்கியின் பெயர், எந்தக் கிளை என்பதை அறிவியுங்கள். என்டப்பிரைசஸ் ஸ்ரீ லங்கா திட்டத்தின் அவசர தொடர்பு இலக்கம் 2015 ஆகும் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## வெள்ளத்தால் 350 இற்கும் மேற்பட்ட வியாபார நிலைங்கள் பாதிப்பு!





மலையக பிரதேசங்களில் பெய்த நேற்று முன்தினம் பெய்த கடும் மழை காரணமாக அக்குறணை பிரதேசத்தில் ஏ9 வீதி சுமார் ஒரு கிலோ மீற்றர் வரை நீரில் மூழ்கியது.

அக்குறணை 6 ஆம் கட்டை பிரதேசம் முதல் ஏழாம் கட்டை பிரதேசம் வரை சுமார் ஒரு கிலோ மீற்றருக்கும் அதிக தூரம் முற்றாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்தது. சுமார் 350 இற்கும் அதிகமான வியாபார நிலையங்களும் வீடுகளும் நீரில் பகுதியளவு மூழ்கி பாதிக்கப்பட்டமையால் பல லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் பொலன்னறுவையில் இருந்து கண்டியை நோக்கி பயணித்த பஸ் ஒன்று வெள்ளத்தில் சிக்கியதையடுத்து பிரதேச மக்கள் கடும் முயற்சிக்கு மத்தியில் அதில் பயணித்த பிரயாணிகள் காப்பாற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## புதுக்கடை புனித செபஸ்தியார் தேவாலய திருவிழா!





கொழும்பு புதுக்கடை புனித செபஸ்தியார் தேவாலயத்தின் 175ஆவது ஆண்டு திருவிழா வெகுவிமர்சையாக கொண்டாடப்பட்டுள்ளது.

திருவிழா திருப்பலி நேற்று முன்தினம் மாலை 7 மணிக்கு ஆரம்பமாகி, தொடர்ந்து புனித செபஸ்தியாரின் திருச்சொரூப பவனி இடம்பெற்றுள்ளது.

இந்த திருவிழாவில் பங்கு மக்கள், பங்கு தந்தை உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டிருந்தனர்.

## க.பொ.த. சாதாரண தரத்திற்கான பாட எண்ணிக்கை மேலும் குறைப்பு!

கொழும்பு, ஒக். 01

இலங்கையின் கல்வித்துறையில் க.பொ.த சாதாரண தரத்திற்கான பாட எண்ணிக்கை மேலும் குறைக்கப்படவுள்ளது எனகல்விஅமைச்சர்அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இதன்படிதற்போதுஒன்பதாகக் காணப்படும் பாடங்களின் எண்ணிக்கை எதிர்காலத்தில் ஆறாக குறைக்கப்படவுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் குருநாகலில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஆனாலும், இந்த விடயம் அரசின் தான்தோன்றித்தனமான செயற்பாடு என சுட்டிக்காட்டியுள்ள இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதான செயலாளர் மஹிந்த ஜயசிங்க, படாவிதானத்தில் மாற்றம் மேற்கொள்ளப்படவேண்டுமாயின் உரிய தரப்பினரின் ஆலோசனைகளைப் பெறவேண்டும் என்று குறிப்பிட்டார்.

அதைவிடுத்து இவ்வாறுதான் தோன்றித்தனமாக அரசு நினைத்தபடி செயற்பட்டால் கல்வித்துறையில் பெரும் நெருக்கடி நிலை தோன்றும் என மேலும் தெரிவித்தார்.

இதேவேளை சில வருடங்களுக்கு முன்னர் பத்துப் பாடங்களாக இருந்து ஒன்பது பாடங்களாகக் குறைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## ரூபாவின் பெறுமதியில் வீழ்ச்சி; சீர்செய்ய ஐ.தே.கவின் விசேட குழு!

கொழும்பு, ஒக். 01

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் டொலரின் விலையேற்றத்துக்கு முகம்கொடுத்து ஏற்றுமதித் துறையைப் பலப்படுத்துவதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பேரில் விசேட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட குழு நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் எனவும் கூறப்படுகின்றது.

டொலரின் விலையேற்றத்திற்கு ஏற்ப, ரூபாவின் பெறுமதியில் வீழ்ச்சி ஏற்படாது பாதுகாப்பதற்குத் தேவையான பரிந்துரைகளை முன்வைப்பது இக்குழுவின் பொறுப்பாகும் எனவும் ஐ.தே.க. தகவல்கள் தெரிவித்துள்ளன.

## கைவிடப்பட்டிருந்த முதியவரை மீட்டெடுத்த லிந்துலை பொலிஸார்!

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹட்டன் – நுவரெலியா பிரதான வீதியின் மட்டுக்கலை சந்தியிலுள்ள பஸ் தரிப்பிடத்தில் அநாதரவாகக் கைவிடப்பட்டிருந்த 65 வயது மதிக்கத்தக்க முதியவர் ஒருவரை லிந்துலை பொலிஸார் நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் மீட்டுள்ளனர்.

இந்த முதியவர் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டிருந் தார் என்றும் அவரை பிரதேசத்திற்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தரின் உதவியுடன் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதித்துள்ளோம் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த முதியவர் தொடர்பான எவ்வித தகவல்களும் தமக்குக் கிடைக்கவில்லை என்றும் அவர் தொடர்பில் தகவல்கள் தெரிந்தவர்கள் லிந்துலை பொலிஸாருடன் 05 22258340 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு கொடர்பு கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இந்த முதியவர் அவரின் உறவினர்களாலே கைவிடப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

## மின்சாரம் தாக்கி சிப்பாய் உயிரிழப்பு

மதவாச்சி பு– ஓய இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் மின்சாரத் தாக்குதலுக்கு இலக்காகி பரிதாபகரமாக பலியாகியுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

இந்த இராணுவச் சிப்பாய் நேற்று முன்தினம் மின்னொழுக்கு காரணமாக இந்த அனர்த்தத்துக்கு முகம் கொடுத்துள்ளார் என கூறப்பட்டுள்ளது.

மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளான இராணுவச் சிப்பாய் வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

சம்பவத்தில் பலியானவர் அம்பேபுஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதுடைய நபர் என பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

### அம்பேபுஸ்ஸ முகாம் கொலைச் சம்பவம்:

## இரு ராணுவத்தினர் பணி இடைநீக்கம்!

அம்பேபுஸ்ஸ இராணுவ முகாமில் பணியாற்றிய இராணுவச் சிப்பாய் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இரண்டு இராணுவத்தினரும் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவ சிங்க ரெஜிமென்டின் ஆரம்ப விசாரணை நீதிமன்றம் மற்றும் இராணுவ பொலிஸாரால் இருவர் தொடர்பிலும் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்தார்.

விசாரணைகளுக்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகள் பொலிஸாரிடம்பெற்றுக்கொள்ளப்படவுள்ளன. அதேசமயம் அவர்கள் இருவரினதும் சம்பளமும் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 21 ஆம் திகதி அதிகாலையில் அம்பேபுஸ்ஸ இராணுவ முகாமில் பணியாற்றிய இராணுவச் சிப்பாய் ஒருவர் ஆயுதங்களால் தாக்கி கொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பொலிஸாரின் விசேட நடவடிக்கை; 5 மணி நேரத்தில் 1714 பேர் கைது!

பொலிஸார் நேற்று முன்தினம் அதிகாலை வரை நடத்திய 5 மணி நேர விசேட தேடுதல் நடவடிக்கையின் போது பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 1714 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் மா அதிபரின் விசேட ஆலோசனைப்படி நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்களை கைது செய்வதற்காகவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

கடந்த சனிக்கிழமை இரவு 11 மணி முதல் நேற்று முன்தினம் அதிகாலை 5 மணி வரை இந்த விடே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

**கைதடி கிழக்கு இந்து வாலிபர் சங்கத்தின் வைர விழா நிகழ்வு நேற்று முன்தினம் கைதடியில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு முதல்வர் விக்னேஸ்வரன் ஆற்றிய உரையின் தொகுப்பு இது.**

# நமது இளைஞர்களை தவறாக வழி நடத்தும் சதியும் நடக்கின்றது!

கைதடிகிழக்கைச்சேர்ந்த இந்து வாலிபர்கள் அனைவரும் அணிதிரண்டு இந்த வைர விழா நிகழ்வுகளை முன்னெடுத்துச் செல்வது எனக்கு மட்டில்லா மகிழ்வைத் தருகிறது.

ஒன்று – இறை பக்தியுடனான எமது பாரம்பரிய வாழ்க்கைமுறை, சமுதாய ஒற்றுமை, சீரிய பழக்க வழக்கங்கள் ஆகியன இன்னமும் அழிந்து போய் விடவில்லை என்பதை இது எடுத்துக் காட்டுகின்றது.

இரண்டாவது – வாழ்க்கையில் உயர்வடைய குறுக்கு வழிகளைத் தேடி சிக்கல்களில் மாட்டிக் கொள்ளாத ஓர் இளைஞர் சமுதாயம் உருவாகி வருகின்றது என்பதை எடுத்துக் காட்டுகின்றது உங்கள் வைரவிழா நிகழ்வுகள். அரசியல்வாதி என்ற அடையாளத்தைத் தாங்கும் நபர்களை நீங்கள் அழைக்காததையே குறிப்பிடுகின்றேன். அது என்னவோ என்னை ஓர் அரசியல்வாதியாக நானும் கருதவில்லை. என் அருமை மக்களும் கருதவில்லை!

மூன்றாவது – உங்கள் அறுபது ஆண்டு கால தொடர் நடவடிக்கைகள் மேலும் மெருகூட்டப்பட்டு வளர்ந்து செல்வது மகிழ்வைத் தருகிறது.

சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னர் கைதடி வீரபத்திரர் ஆலயம் அருகில் அக் கால சமய ஆர்வலரான ஆறுமுகம் கந்தையா M.P அவர்களைத் தலைவராக கொண்டு 1958ல் இந்த இந்து வாலிபர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த இந்து வாலிபர் சங்கம் பல்வேறு தூரநோக்குடைய விடயங்களை ஆய்ந்தறிந்து நிறைவேற்றுகின்ற சிறந்த குணம் கொண்ட தலைவர்களாலும், உறுப்பினர்களாலும் வழிநாடத்தப்பட்டு தனது 60 ஆண்டு கால சமூக சமயப் பணிகளை இனிதே நிறைவு செய்து நிமிர்ந்து நிற்கும் இந் நிலையில் உங்களுடன் சேர்ந்து இந் நிகழ்வுகளில் கலந்து கொள்வதை ஒரு பேறாகக் கருதுகின்றேன்.

**கிராம எழுச்சி**

கிராமங்கள் எழுச்சி பெறுவதற்கு அவ்வப் பகுதியில் உள்ள சனசமூக நிலையங்கள் சிறப்புற செயற்படவேண்டுமென்பது பொதுவான கருத்து. அத்துடன் இறைபக்தியுடன் கூடிய ஒரு இளைஞர் கட்டமைப்பை உருவாக்குவதற்கு இவ்வாறான இந்து வாலிபர் சங்கங்கள் மிகச் சிறப்பாக உதவி புரிகின்றன. சைவமும் தமிழும் விளைந்த பூமியாக காணப்படுகின்ற இலங்கையின் வடபகுதியானது தமது சமயஞ் சார்ந்த நிகழ்வுகளையும், வழிபாட்டு முறைகளையும் சமய அறிவுரைகளையும் கொண்டுசெல்ல இவ்வாறான சனசமூக நிலையங்கள் அதி முக்கியத்துவம் பெறுகின்றன. தேவாரம், திருவாசகம் ஓதுதல், பூமாலை கட்டுதல் போன்ற சரியை தொண்டுகள் ஆற்றக்கூடிய இளைஞர்கள் பலர் இந் நிகழ்வில் கலந்து கொண்டுள்ளனர் என அறிகின்றேன். சமய அறிவு கொண்ட, சமய வழியில் வாழும் பல பிரமுகர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருந்து வருவதைக் காண்கின்றேன். ஆகவே சைவ சமயத்தின் வளர்ச்சியை எந்தவொரு பிறசக்திகளோ மற்றைய மதங்களோ அழித்துவிடமுடியாது என்பதற்கு உங்கள் அனைவரதும் எழுச்சிமிகு செயற்பாடுகள் கட்டியம் கூறுகின்றன.

கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என ஔவைப்பிராட்டி அன்று கூறினார். காரணம் கோவில் இருந்தால் அங்கு சமயம் இருக்கும், சாப்பாடு இருக்கும், சயன வசதிகள் கூட இருக்கும் என்பதே. அவனருளால் அவன் தாள் வணங்கி அவன் அருள் பெற்ற உண்டியை உண்டு அவனருகே உறங்கி எழுந்து உற்சாகமாகச் செல்ல கோவில்கள் உதவி புரிந்தன. ஒரு ஊரில் கோவில் கோபுரங்கள் தென்படுமாயின் அக் கோவிலில் நித்திய அன்னதானங்களும் சுத்தமான குடிதண்ணீரும் கிடைக்கும் என்ற நம்பிக்கை அன்றிருந்தது. பக்தர்கள் எதுவித மனக்கிலேசமும் இன்றி அக் கோவில்களை நாடி பூஜை வழிபாடுகளை முடித்துக் கொண்டு வயிறார உணவருந்தி உறக்கம் கொண்டுவிட்டுத் தமது பயணத்தை தொடரமுடிந்தது.

அந்தக்காலத்தில் சிவ பக்தர்கள் தாம் அன்றாடம் உணவு உண்பதற்கு முன்னர் ஒரு சிவ தொண்டனை அழைத்து வந்து அவருக்கு போசன சுகம் அளித்த பின்பே தாம் உணவு உண்பர்.

என் பால்ய நாள்கள் 1940களில் குருநாகலிலும் அனுராதபுரத்திலும் கழிந்தன. தெருவில் செல்லும் பிச்சைக்காரர்களை 'ஃகாம ஓனத' 'சாப்பாடு வேண்டுமா' என்றழைத்து அவர்களுக்கு உணவு கொடுத்த பின்னரே என் தாயார் எனக்கு உணவளிப்பார். அது அந்தக் காலம். இன்று அவ்வாறான சிந்தனைகள் அற்றுப் போய்விட்டன. நாங்கள் யாவரும் சுயநலத்துடன் வாழவே பழகிக் கொண்டுள்ளோம். கோவில்கள் இருந்தும் சமய அனுஷ்டானங்களில் எமது மனம் செல்வதில்லை.

> **என் பால்ய நாள்கள் 1940களில் குருநாகலிலும் அனுராதபுரத்திலும் கழிந்தன. தெருவில் செல்லும் பிச்சைக் காரர்களை 'ஃகாம ஓனத' 'சாப்பாடு வேண்டுமா' என்றழைத்து அவர்களுக்கு உணவு கொடுத்த பின்னரே என் தாயார் எனக்கு உணவளிப்பார். அது அந்தக் காலம். இன்று அவ்வாறான சிந்தனைகள் அற்றுப் போய்விட்டன.**

**கோவில்களின் நிலைமை**

இன்று கோவில்களில் தேவாரம் பாடுவதற்கு பிள்ளைகள் இல்லை. மரண வீடுகளில் கூலிக்கு ஆள்கள் பிடித்து தேவாரம் பாடப்படுகின்றது. ஆனால் சைவ மரபு கடைப்பிடிக்கப்படுகின்ற சில கிராமங்களில் இன்றும் மரண வீடுகள் இடம்பெறுமாயின் நீண்ட கொட்டகை அமைத்து அதில் நெற்கதிர்ப்பாய் விரித்து தேவாரம் பாடுபவர்களை அமர்த்துவார்கள். அவர்கள் அமர்ந்திருந்து பக்தியுடன் தேவாரம் பாடுகின்ற அழகு திருவையாறு மார்கழி உற்சவத்தில் எம்மவர்கள் இசை நிகழ்வுகளை நடத்துவதற்கு ஒப்பாக இருக்கும்.

சிறப்பு மிகுந்த எமது வாழ்வியல் தத்துவங்களை உணர்த்துகின்ற சைவ சமயத்தை வளர்ப்பதற்கும் அதனைப் பேணிப் பாதுகாப்பதற்கும் எம்மவர்கள் முன்வரவேண்டும். அதை உங்கள் சங்கத்தினர் அன்றிருந்தே செய்து வருகின்றார்கள் என்று தெரிகிறது. கைதடி இந்து வாலிபர் சங்கத்தின் வரலாற்றைத் திருப்பிப் பார்க்கின்ற போது அக் காலத்தில் இருந்தே இந்து வாலிபர் சங்க உறுப்பினர்கள் திருவெம்பாவை காலங்களில் அதிகாலையில் எழுந்து திருவெம்பாவை பாடுகின்ற நகர சங்கீர்த்தனத்தை வழமையாகக் கொண்டிருந்தமை, சமய குரவர் குருபூசைகள் நடத்தி வந்தமை, சரஸ்வதி பூசை போன்ற பல்வேறு நிகழ்வுகளில் தவறாது கலந்துகொண்டு வாணி விழாக்களை இரவிரவாகக் கொண்டாடி மக்களைத் தெய்வீக சிந்தனைகளில் மூழ்கி இருக்கச் செய்தமை போன்ற பல்வேறு நிகழ்வுகள் அவர்களின் வரலாற்றுக் குறிப்பில் பட்டியலிடப்பட்டு காட்டப்பட்டுள்ளன.



## முதல்வர் விக்கி எச்சரிக்கை

**அறநெறிப் போதனை**

சிறு பிள்ளைகளுக்கிடையே சமய அறிவை மேம்படச் செய்வதற்கு அறநெறிப் பாடசாலைகளை அமைத்து அங்கே கல்வி நெறி வகுப்புக்கள், பா ஓதல், பண்ணிசை வகுப்புக்கள், பால விகார் வகுப்புக்கள் என சைவம் சார்ந்த பல்வேறு வகுப்புக்களை ஞாயிற்றுக் கிழமைகளிலும் முக்கிய தினங்களிலும் முன்னெடுக்க வேண்டிய அவசியம் எமக்குண்டு.

ஏனைய மதங்களைச் சார்ந்த பிள்ளைகள் தூய உடை அணிந்து ஞாயிற்றுக் கிழமைகளில் அவர்களின் மதம் சார்ந்த வகுப்புக்களுக்குத் தவறாது சமுகமளிக்கின்றார்கள். அதேபோன்று எமது பிள்ளைகளும் இறைபக்தியுடன் கூடிய எளிய வாழ்க்கை முறைக்கு திரும்புவதற்கு நாம் அவர்களை சிறுவயதில் இருந்தே பயிற்றுவிக்க வேண்டும்.

இவையெல்லாம் தேவையற்றவை என்று எம்முட் பலர் கூறுவதை நான் கேட்டுள்ளேன். 'டியூஷன் வகுப்பு முக்கியமா அறநெறிப் பாடசாலை முக்கியமா?' என்று சிலர் கேட்கின்றார்கள். 'இந்து சமயம் பற்றி அறிய அறநெறிப் பாடசாலைகளுக்குப் போய்த்தான் படிக்க வேண்டுமா?' என்று வேறு சிலர் கேட்கின்றார்கள். அவர்களிடம் நான் கேட்கும் கேள்வி 'விளையாட்டு வீரர்கள் ஏன் பயிற்சி எடுக்கின்றார்கள்?' என்பது. விளையாட்டு நடைபெறுந் தினம் அன்று தானே அவர்களுக்கு வேலையுண்டு. அது என்ன தினமும் ஓடுகின்றார்கள், பயிற்சி எடுக்கின்றார்கள், உடலைக் கெட்டியாக வைத்துக் கொண்டுள்ளார்கள் என்று கேட்டால் விளையாட்டுக்களுக்கு பயிற்சி அவசியம் என்கின்றார்கள். அதே போல் நல் வாழ்க்கைக்கு, மனம் இளகி நிற்பதற்கு, இறைவனுடன் சார்ந்து நிற்பதற்கு, தியானம் பண்ணுவதற்கு, மக்களுடன் மனம் திறந்து தோழமையுடன் பேசுவதற்கு அறநெறிப் பாடசாலை சூழலும் பயிற்சியும் தேவையாக இருக்கின்றன. உங்கள் மதம் பற்றித் தெரிந்து வைத்திருக்க அறநெறிப் பாடசாலைகள் அவசியமாக இருக்கின்றன. இப்பொழுது கூட பல இக்கட்டான சூழல்கள் என்னைப் பாதிக்கும் போது நான் என் அறையில் இருந்து கொண்டு நான் படித்த தேவாரங்களை மனம் உருகப் பாடுவேன். சிறிது நேரத்தில் தானாகவே நித்திரைக்குப் போய்விடுவேன். எழுந்ததும் எந்தச் சூழ்நிலையையும் எதிர் கொள்ளத் தயாராகி விடுவேன். சமயத்தோடு ஒன்றிய வாழ்க்கை முறை எங்களுக்கு வாழ்க்கையில் ஏற்படும் இக்கட்டான சூழ்நிலைகளை எதிர் கொள்ள உதவி புரிகின்றது.

**இளைஞர்களின் குழப்பம்**

இன்று இளைஞர்களிடையே காணப்படுகின்ற குழப்பங்களுக்கு மூலகாரணம் அவர்களிடையே சிறு பிராயந் தொடக்கம் ஒழுக்க உணர்வை வளர்க்காமையே. தாய் தந்தையரின் நேரடிக் கண்காணிப்பின்கீழ் பிள்ளைகள் வளராமை, பிள்ளைகளின் கைகளில் தேவைக்கதிகமாகப் பணப்புழக்கம் ஏற்படுவது போன்ற இன்னோரன்ன குறைபாடுகளே மாணவர்களை குழப்ப நிலைக்கு இட்டுச் செல்கின்றன. கல்வியின்பால், ஒழுக்கத்தின்பால், முதியோர்களைக் கௌரவிக்கின்ற தன்மையின்பால் மனம் செல்லாது வன்முறைகளிலும் முதியோரை எதிர்கின்ற தன்மைகளிலும் அவர்களை ஈடுபட வைக்கின்றது.

(09 ஆம் பக்கம் பார்க்க)

# 5 வருடங்களில் 50 ஜப்பானிய கப்பல்கள் இலங்கை துறைமுகங்களுக்கு வருகை



கடந்த ஐந்து வருடகாலப்பகுதியில் ஜப்பானிய கடற்படைக்குச் சொந்தமான 50றக்கு மேற்பட்ட கப்பல்கள், இலங்கைக்கு வருகை தந்துள்ளன என நேற்று இலங்கைக்கு வருகை தந்த ஜப்பானியக் கடற்படையின் ஹெலிக்கொப்டர் நாசகாரி கப்பலான 'ககா'வின் தளபதி ரியல் அட்மிரல் டட்சுயா ஃபுக்குடா தெரிவித்தார்.

யுத்தம் நிறைவுபெற்றபின்னர் இலங்கைக்கு 65றக்கும் அதிகமான ஜப்பானிய கடற்படைக்குச்சொந்தமான கப்பல்கள் வருகைதந்துள்ளன என அண்மையில் வெளிநாட்டு ஊடகமொன்றில் வெளியான செய்தியைச் சுட்டிக்காட்டி இலங்கையில் வெளிநாடுகளின் ஆதிக்கம்தொடர்பில் குறிப்பாக சீனாவின் பிரசன்னம் தொடர்பில் ஜப்பான் எவ்வளவு கரிசனை கொண்டுள்ளதென செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே ஜப்பானிய தளபதி கடந். ஐந்து வருடங்களில் ஜப்பானின் 50றக்கும் மேற்பட்ட கப்பல்கள் வருகை தந்துள்ளமையை உறுதிப்படுத்தினார்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கையின் முக்கியத்துவத்தை ஜப்பானிய கப்பல்களின் வருகை உணர்த்தி நிற்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஜப்பானைப் பொறுத்தவரையில் அதன் இருப்பிற்கு கடற்பாதைகளின் பாதுகாப்பு மிகவும் முக்கியமானதெனக் குறிப்பிட்ட ஜப்பானிய ககா கப்பலின் தளபதி இந்த விடயத்தில் ஜப்பான் மிகவும் கரிசனை கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டார். இந்து - பசுபிக் வலயத்தில் சுதந்திரமான கடற்போக்குவரத்தை உறுதிசெய்வது அவசியமென்ற ஜப்பானிய வெளியுறவுக்கொள்கையை சுட்டிக்காட்டிய ஜப்பானிய தளபதி இதில் இலங்கை முக்கிய பாத்திரத்தை வகிப்பதாகக் கூறினார்.

நேற்று கொழும்பு துறைமுகத்திற்கு வருகைதந்துள்ள ஜேஎஸ் ககா என்ற ஹெலிக்கொப்டர் நாசகாரிக் கப்பல் ஜப்பானிய கடற்தற்பாதுகாப்பு படைப்பிரிவில் 2017ஆம் ஆண்டில் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டது. 248 மீற்றர்கள் நீளமானதும் 38 மீற்றர்கள் அகலமானதுமான இந்தக் கப்பலில் தற்போதைய நிலையில் நீர்மூழ்கிகளை தாக்கி யழிக்கக்கூடிய 7 ஹெலிக்கொப்டர்களும் இரண்டு தேடுதல் மற்றும் மீட்பு பணி ஹெலிக்கொப்டர்களும் தரித்து நிற்க





முடியும்.

ஆனால் தேவை ஏற்படும் இடத்து 28 விமானங்கள் வரையில், அன்றேல் 14 பெரும் விமானங்கள் வரையில் கொண்டுசெல்லமுடியும் எனச் சுட்டிக்காட்டப்பட்டது. இரண்டாம் உலகப் போரின் போது ஜப்பானிய கடற்படையில் முக்கிய பங்காற்றிய ககா விமானந்தாங்கி கப்பலின் பெயரே இந்தக் கப்பலுக்கும் சூட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரண்டு மாதங்கள் நீடிக்கும் பயணத்தின் போது பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு விஜயம் மேற்கொண்ட நிலையில் இலங்கை வந்துள்ள இந்த ஜப்பானிய கப்பல் இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு இந்தியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பெண் சுட்டுக் கொலை

ஜாஎல, வெலிகம்பிட்டிய பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டுச் சம்பவம் ஒன்றில் 40 வயது பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்த இந்தப் பெண் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் வாகனத்தில் சென்ற இந்தப் பெண் மீது இனந்தெரியாத ஒருவரினால் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று கூறப்பட்டது.

## வவுனியா நகரசபையால் ஒரு மாத காலமாக திருத்தப்படாத குழாய்க்கிணறு

### ஈ.பி.டி.பியினரால் திருத்தி அமைப்பு!



வவுனியா, ஒக்.01

வவுனியா நகரசபையால் ஒரு மாதகாலமாக திருத்தப்படாது இருந்த குழாய்க் கிணறு ஈழமக்கள்ஜனநாயகக்கட்சிஉறுப்பினர்களால் திருத்தி அமைக்கப்பட்டது.

வவுனியா பழைய பஸ் நிலையத்தின் முன்னால் உள்ள நகரசபைக்கு சொந்தமான குழாய்க்கிணறு கடந்த ஒரு மாதகாலமாக பழுதடைந்த நிலையில் காணப்பட்டது.

இது குறித்து பொதுமக்களும், அப்பகுதி வர்த்தகர்களும் வவுனியா நகரசபைக்கு பலமுறை தெரிவித்த போதும், ஆளணிப் பற்றாக்குறை எனவும், திருத்துவதற்கான பொருள்கள் இருப்பில் இல்லை எனவும் கூறி கடந்த ஒரு மாதமாக திருத்தப்படாமல் இருந்தது.

அப்பகுதியால் பயணத்தை மேற்கொள்ளும் தூரபிரதேச பயணிகள் பலரும் இதனால் குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்ள முடியாது அவதியுற்றனர்.

இந்த நிலையில், ஈழமக்கள் ஜன நாயகக் கட்சி உறுப்பினர்களின் பங்களிப்புடன் நேற்று இந்தக் குழாய்க்கிணறு திருத்தி அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு ஏற்ற வகையில் மாற்றியமைக்கப்பட்டது.

இதில் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் வவுனியாமாவட்ட அமைப்பாளர் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (க-100)

# நமது இளைஞர்களை...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பல பிள்ளைகள் தீய வழியில் செல்வதற்கு அவர்களுக்குத் தெரியாமலேயே அவர்களின் பெற்றோர்கள் காரணமாகின்றார்கள். 'தம்பி இப்பொழுது எங்கே போகின்றாய்?' என்று பெற்றோர்கள் மகனிடம் கேட்பதில் தவறே இல்லை. 'அது உங்களுக்குத் தேவையில்லாத விடயம்' என்று கூறி விட்டு விசை வண்டியில் விருட்டென்று செல்பவருக்கு வீட்டில் இரவு உணவு வைக்காது விடுதல் பிழையில்லை. இதன் காரணமாக 'நான் தனித்து வாழப் போகின்றேன்' என்று சொல்லும் மகனுக்குத் 'தாராளமாக' என்று கூறுவதில் பிழையில்லை, தவறில்லை. ஆனால் இவற்றை எல்லாம் விட ஆரம்பத்தில் இருந்தே குழந்தைப் பருவத்தில் உங்கள் குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடி அவர்களின் அன்பையும் மதிப்பையும் பெறுவதே காலக்கிரமத்தில் நன்மைதரும்.

இளைஞர்கள், யுவதிகள் இந்த நாட்டின் சிறந்த பிரஜைகளாக எதிர்கால வழிகாட்டிகளாக கல்வியில் சிறந்தவர்களாக மற்றவர்கள் போற்றத்தக்க வகையில் உயர்தகைமையுடன் கூடிய ஒழுக்கசீலர்களாக வாழுவதற்கு ஏற்ற வகையில் அவர்கள் வழிகாட்டப்பட வேண்டும். இவ்வாறான வழிகாட்டல்கள் நகரப்புறங்களில் இருந்து ஆரம்பிப்பது கடினம். ஆனால் கிராமப் புறங்களில் இவற்றை நடைமுறைப்படுத்துவது சுலபம். ஒவ்வொரு கிராமங்களிலும் அப்பகுதிகளில் இருக்கும் இளைஞர்கள் பலர் ஒன்று சேர்ந்து தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற தமது உறவினர்களை, தமது நண்பர்களை, தமது அயலவர்களை முறையாக வழிநடத்தி 'அவர்களுக்கு உரிய புத்திமதிகளைக் கூறி' அவர்களை நேர் பாதையில் இட்டுச் செல்ல முடியும். இவ்வாறான செயல்களால் கிராமங்கள் எழுச்சிபெறும். அப்போது நகரங்கள் தாமாகவே சீரிய நிலைக்குத் திரும்புவன. அறநெறி பாற்பட்ட இளைஞர், யுவதிகளால்த்தான் இன்றைய சூழல் திசைதிருப்பப்பட்டு எமது இளைய சமுதாயம் திருந்தி வாழ நடவடிக்கைகள் எடுக்க முடியும். தவறுகள் செய்த எமது இளைஞர் யுவதிகளை ஒதுக்கி வைக்கக் கூடாது. அவர்களுடன் பழகி அவர்களை நல் வழிப்படுத்த அவர்கள் நண்பர்களாலேயே முடியும். ஆகவே அறம் சார்ந்த எம் இளைஞர் யுவதிகளுக்குப் பாரிய கடமைகள் இருப்பதை இத்தருணத்தில் கூறி வைக்கின்றேன்.

இன்றைய இளைஞர்கள் தவறான வழிகளில் செல்கின்றார்கள் என்றால் அதற்கு அவர்கள் மட்டுமோ அல்லது அவர்கள் பெற்றோர்களோ காரணமென்று திடமாகக் கூறமுடியாது. மாறாக தமிழ் இளைஞர்கள் தமது கொள்கைகளை மறந்து படாடோபங்களிலும் போதைவஸ்துப் பாவனையிலும் திளைத்து வேறொரு உலகத்தில் சஞ்சரிப்பவர்களாக மாற வேண்டும், தமது இனம் பற்றிய விழிப்புணர்வுகள் எதுவும் அற்றவர்களாக வாழ வேண்டும், என்று திட்டமிட்டு அவர்களுட் சிலரை சதிகாரக் கும்பல்கள் பிழையான வழிகளில் வழிநடத்துகின்றார்கள் என்பதை எமது இளைய சமுதாயம் உணர வேண்டும். இவ்வாறான நோக்கம் படையினர் இடையே இருப்பதைச் சில படையினரே வெளிக்கொண்டுவந்துள்ளனர். ஆகவே சூழல் எமது இளைய சமுதாயத்தவர்களுக்கு எதிராகவே இருப்பதை நாம் உணர வேண்டும்.

இவற்றை உடனடியாகவே அவதானித்து கட்டுப்படுத்துவதற்கும் பிள்ளைகளை சரியான பாதையில் இட்டுச் செல்வதற்கும் பெற்றோர்கள் பலர் தவறிவிடுகின்றார்கள். எனவேதான் இந்த பூதாகாரமான பிரச்சினைகளில் இருந்து எமது இளைஞர் யுவதிகள் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் அது அவர்களின் நண்பர்களாலும் உறவினர்களாலும் ஏனைய இளைஞர்களாலுமே நிறைவேற்ற முடியும் என்று கூறுகின்றேன்.

அதற்காக ஏனைய இளைஞர்கள் வன்முறைக் கலாசாரங்களில் ஈடுபட்டு அவர்களை அடக்குவதாக அது அர்த்தப்படாது. மாறாக தமது உற்ற நண்பர்களை, உறவினர்களை முறையாக வழிநடத்த வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் அவர்கள் அன்புடன் மற்றையோரை வழிநடத்த முன் வரவேண்டும்.

கைதடி கிழக்கு சனசமூக நிலைய இந்து வாலிபர் சங்கம் இவ் விடயங்களில் முன்மாதிரியாகத் திகழும் என்ற நம்பிக்கையுடன் உங்கள் வைரவிழா நிகழ்வுகள் சிறப்புற நடைபெற எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறேன். *

# பாலத்தில் செல்லும் படகு




பாலம் எதற்காகக் கட்டுவார்கள்? ஆற்றையோ, கடலையோ கடப்பதற்காகக் கட்டுவார்கள். ஆனால், ஆற்றின் மேலேயே ஒரு நீர்ப் பாலத்தை ஜேர்மனியில் அமைத்திருக்கிறார்கள். இதைவிடப் பெரிய வியப்பு, அந்த நீர்ப் பாலத்தின் மேலே படகுப் போக்குவரத்தும் நடைபெறுகிறது.

உலகில் அமைந்துள்ள மிக நீளமான நீர்ப் பாலம் எனப் புகழ்பெற்ற இது மேக்டீபர்க் (Magdeburg) என்ற இடத்தில் அமைந்திருக்கிறது. பாலத்தின் மொத்த நீளம் 918 மீற்றர். பாலத்தின் அகலம் 34 மீற்றர். பாலத்தின் ஆழம் 4.25 மீற்றர். கிழக்கு ஜேர்மனியையும், மேற்கு ஜேர்மனியையும் இணைப்பதற்காக இந்தப் பாலம் கட்டப்பட்டது.

1997ஆம் ஆண்டு இந்தப் பாலத்திற்கான கட்டுமானப் பணிகள் தொடங்கின. 2003ஆம் ஆண்டு பணிகள் முடிந்து பாலம் போக்குவரத்துக்குத் திறக்கப்பட்டது. ஆனாலும் இந்தப் பாலம் கட்ட நூறாண்டுகளுக்கு முன்பு 1905ஆம் ஆண்டிலே திட்டமிடப்பட்டது. பல கட்ட சோதனைகளுக்குப் பிறகு 1930ஆம் ஆண்டு தொடங்கி 1942ஆம் ஆண்டு வரை கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால், இரண்டாம் உலகப் போர் காரணமாகப் பணிகள் நிறுத்தப்பட்டன. போர் முடிந்த பிறகு மீண்டும் பாலம் கட்ட முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால், அப்போது இரு நாடுகளாகக் கிழக்கு ஜேர்மனியும் மேற்கு ஜேர்மனியும் பிரிந்திருந்தன. இதனால், இரு நாடுகளுக்கும் இடையே பனிப்போர் நிலவியது. இதனால், கட்டுமானப் பணிகளைத் தொடங்க முடியவில்லை. இறுதியாக 1990ஆம் ஆண்டில் கிழக்கு ஜேர்மனியும் மேற்கு ஜேர்மனியும் ஒன்றாக இணைந்த பிறகே நீர்ப் பாலம் கனவு நிறைவேறியது.

தற்போது ஜேர்மனியின் தலைநகரான பெர்லினின் உள் நாட்டுத் துறைமுகத்தையும், போர்ட் என்றழைக்கப் படும் கண்டெய்னர்கள் தயாரிக்கப்படும் துறைமுகத்தையும் ரைன் நதி வழியாக இந்த நீர்ப் பாலம் இணைக்கிறது.



# உலகின் அதிசயத் தீவு டிராகன் மரங்கள்

உலகில் எத்தனையோ அதிசயங்களும் விநோதங்களும் மர்மங்களும் ஏராளமாக இருக்கின்றன. இப்படி விநோதங்களும் மர்மங்களும் கொண்ட ஒரு தீவு உலகில் இருக்கிறது. இந்தத் தீவில் எங்கு பார்த்தாலும் அதிசயம் கொட்டிகிடக்கிறது. பார்க்கின்ற அனைத்துமே இதற்கு முன்பு நாம் பார்க்காதவை. இந்தத் தீவில் காணப்படும் பொருள்கள் எல்லாம் வேறு எங்கும் காணப்படாதவை. இப்படி அதிசயத் தீவாகப் பார்க்கப்படும் அதன் பெயர் சோகோட்ரா.

இந்தியப் பெருங்கடலில் ஆபிரிக்கக் கடற்கரை கொம்பு முனைக்கும் அரேபியத் தீபகற்பத்திற்கும் தெற்கே 350 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது நான்கு தீவுகள் அடங்கிய அந்தச் சிறு தீவுக் கூட்டம். 70 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு ஆப்பிரிக்கக் கண்டத்துடன் இணைந்திருந்த இத் தீவு, நாளடைவில் ஏற்பட்ட புவியியல் மாற்றம் காரணமாகத் தனித் தீவுக் கூட்டமானது.

கரடுமுரடான பாலைவனம் போல் உள்ளது இந்தத் தீவு. திட்டு திட்டாகக் காடு, பிரம்மாண்டப் பாறைகள், வித்தியாசமான மரங்கள், விலங்குகள், அழகான கடற்கரை, குகைகள் என இயற்கைக்கு வாக்கப்பட்ட பூமி இது. இங்குக் கடல் மட்டத்திலிருந்து 1525 மீற்றர் உயரத்தில் மலைகள் உள்ளன. இங்கு வளரும் மரங்கள், பல்லுயிர் தாவரங்களை உலகில் வேறு எங்குமே காண முடியாது. வேற்றுக் கிரகச் சூழல் நிலவும் பகுதி இது என விஞ்ஞானிகள் அழைக்கும் இந்தச் சோகோட்ரா தீவு, ஏமன் நாட்டின் ஆளுகையின் கீழ் உள்ளது.

இத்தீவில் 800இற்கும் மேற்பட்ட தாவர வகைகள் உள்ளன. இதில் 240 தாவர வகைகள் எந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்பது இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. குடை போன்ற மரங்கள், பாலைவனத்தில் மட்டுமே காணப்படும் பூக்கள், பாறைகளைப் பொத்துக் கொண்டு வளரும் மரங்கள், மரங்களின் கீழ்ப்பகுதி குண்டாகவும் மேல்பகுதி சூம்பிப் போன விரல்கள் போலவும் காணப்படும் மரங்களின் கிளைகள் என எல்லாமே இங்கு வித்தியாசம்தான்.

டிராகன் மரங்கள் எனப் பெயரிடப்பட்ட மரங்கள் நிறைய உள்ளன. மரத்தில் எங்கேயாவது கீறல் ஏற்பட்டல் சிவப்பு வண்ணத்தில் திரவம் வரும். ரத்தம் உறிஞ்சும் டிராகனை நினைவுபடுத்தும் விதமாக இந்த மரங்களுக்கு டிராகன் மரம் எனப் பெயர் சூட்டியிருக்கிறார்கள். இயற்கை வளம் எந்த அளவுக்கு இங்கே கொட்டிக் கிடக்கிறதோ, அதே அளவுக்குப் புதிர்களும் நிறைந் திருக்கின்றன இத்தீவில். எனவே 2008ஆம் ஆண்டில் இத்தீவுகளைப் பாரம்பரிய நினைவுச் சின்னமாக அறிவித்தது யுனெஸ்கோ.

இங்கு வளரும் தாவரங்கள் பற்றி முழுமையாக அறிய, தொடர்ந்து ஆய்வுகள் செய்து வருகின்றனர் விஞ்ஞானிகள். இந்த அதிசயத் தீவில் சுமார் 40 ஆயிரம் பேர் வசிக்கிறார்கள் என்பது கூடுதல் தகவல்.

# புத்தியுள்ள காகம்



காகங்கள், கார்விடே குடும்பத்தைச் சேர்ந்த பறவை இனம். காகங்களில் 40 வகைகள் உள்ளன.

காகங்கள் எந்தப் பருவ நிலையிலும் எல்லா நிலப்பகுதிகளிலும் வாழக்கூடிய தகவமைப்பு பெற்றவை. அண்டார்டிகாவில் மட்டும் காகம் காணப்படுவதில்லை.

ஒரு காகத்திற்கு தினமும் சராசரியாக 280 கிராம் உணவு தேவை.

காகங்கள் புத்திக்கூர்மை உடையவை. காகத்தின் அளவில் உள்ள உயிரினங்களோடு காகத்தை ஒப்பிடும்போது இதனுடைய மூளையே பெரிது.

காகங்கள் கூட்டமாக வாழும் இயல்புடையவை. மனிதர்களிடம் நெருக்கத்தை ஏற்படுத்திக்கொண்டு அனுசரித்து வாழும். பயிர்களைத் தாக்கும் பூச்சிகளைக் காகங்கள் சாப்பிடும்.

குளிர்காலத்திலும் இலையுதிர் காலத்திலும் கூட்டமாக இடம்பெயரும்.

மனிதர்களுக்கு அடுத்து அதிக புத்திக்கூர்மை கொண்டவை காகங்கள் என்று ஆய்வுகள் கூறுகின்றன. உணவு உண்பதற்காகவும் கூடு கட்டுவதற்காகவும் பல பொருட்களைப் பயன்படுத்தக் கற்றுக்கொள்ளும் திறன் காகத்திற்கு உண்டு.

காகங்களுக்குப் பிரத்தியேக மொழி உண்டு. பிராந்தியத்திற்கேற்ப அதன் மொழியும் மாறுபடும். கா! கா! எனக் காகங்கள் போடும் சத்தம் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு அர்த்தம் உண்டாம்.

கூட்டத்தில் உள்ள ஒரு காகம் இறந்துபோகும் நிலையில் இருந்தால், மற்ற காகங்கள் அனைத்தும் கா, கா வெனச் சத்தமிட்டபடி அதைத் தாக்கிச் சாகடித்துவிடும்.

காகம் ஒரே துணையுடன்தான் வாழும். ஆண் காகமும் பெண் காகமும் முட்டைகளை முறை வைத்து அடைகாக்கும். சராசரியாக ஒரு நேரத்தில் 4 முதல் 7 முட்டைகளை இடும்.


மனிதர்களின் முகம் மற்றும் முகபாவத்தை வைத்தே அவர்களை எடைபோடும் திறன் காகங்களுக்கு உண்டு.

காகங்களில் ஆஸ்திரேலிய, வட அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஐரோப்பியா, ஆசியா எனப் பல வகைகள் உள்ளன. காட்டுக் காகம் (அண்டங் காக்கை), வீட்டுக் காகம் ஆகியவை ஆசியாவில் உள்ள இனங்கள்.

மரங்களில் தங்கும் காகங்கள் பொதுவாக 20 ஆண்டுகள் வரை வாழும்.

காக்கைகள் பொதுவாக அனைத்துண்ணிகள். தானியங்கள், புழுக்கள், விதைகள், கொட்டைகள், பூச்சிகள் ஆகியவற்றை உண்ணும். பாம்பு, எலி, தவளை உட்பட இறந்த எல்லாப் பிராணிகளையும் உண்ணும்.


# கண்டுபிடியுங்கள் கலப்பின விலங்கு



படத்தில் உள்ள விலங்கைப் பார்த்திருக்கிறீர்களா? விநோதமான விலங்காக உள்ளது அல்லவா? அது ஒரு தீவிலிருந்து தப்பித்து வந்துவிட்டது. அதன் தலை, கழுத்து, உடம்பு, கால், வால் ஆகியவை எந்தெந்த விலங்குக்குரியவை எனச் சொல்லுங்கள் பார்ப்போம்.

1. தலை..............................
2. கழுத்து..........................
3. உடம்பு..........................
4. கால்.............................
5. வால்............................

# இது எந்த நாடு?



**கீழே உள்ள குறிப்புகளின் உதவியுடன் அவை உணர்த்தும் நாடு எது என்பதைக் கண்டுபிடியுங்கள்.**

1. மத்திய ஆப்பிரிக்காவில் உள்ள நாடு. உலகின் மிகப் பெரிய 11ஆவது நாடு.
2. இந்த நாட்டின் முந்தைய பெயர் ஸைர் (Zaire).
3. இதன் தலைநகரம் கின்ஸா. இதுவே இந்த நாட்டின் மிகப் பெரிய நகரம்.
4. ஆட்சி மொழி பிரெஞ்சு என்றாலும் ஸ்வாஹிலி மொழியைப் பெரும்பாலானவர்கள் பேசுகிறார்கள்.
5. 2001அம் ஆண்டிலிருந்து இந்த நாட்டின் குடியரசுத் தலைவராக ஜோசப் கபிலா இருக்கிறார்.
6. இயற்கை வளம் கொட்டிக் கிடக்கும் நாடு. நிலையற்ற அரசாங்கக் கொள்கைகள் முன்னேற்றத்துக்குத் தடையாக இருக்கின்றன.
7. ஜூன் 30, 1960ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றது.
8. வைரம், செம்பு, கச்சா எண்ணெய், காபி, கோபால்ட் போன்றவை முக்கிய ஏற்றுமதிப் பொருள்கள்.
9. இந்த நாட்டில் பாயும் நதி ஆப்பிரிக்க கண்டத்தின் இரண்டாவது நீளமான நதி. இந்த நதியின் பெயரே இந்த நாட்டின் பெயர்.
10. இங்குள்ள மழைக் காடுகளில் மனிதக் குரங்கு, மலை கொரில்லா, ஒகபி, வெள்ளைக் காண்டாமிருகம் போன்ற அரிய விலங்கினங்கள் காணப்படுகின்றன.

**விடை: காங்கோ ஜனநாயகக் குடியரசு**

# மருத்துவ சேவைகளை புறக்கணித்து போராட்டத்தை தீவிரமாக்கியுள்ளனர் தமிழ் அரசியல் கைதிகள்!

## நிலைமையை விவரிக்கின்றார் சிவசக்தி ஆனந்தன் எம்.பி.

உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பத்து தமிழ் அரசியல் கைதிகளும் மருத்துவ சேவைகளை புறக்கணித்து போராட்டத்தை தீவிரமாக்கியுள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

9 ஆண்டு காலமாக சிறைச்சாலைக்குள் வாடும் தம்மை குறுகியகால மறுவாழ்வு வழங்கியாவது விடுவிக்குமாறு கோரி தமிழ் அரசியல்கைதிகள் கடந்த 14ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

ஆரம்பத்தில் அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 8 கைதிகள் மாத்திரமே போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து மகசின் சிறைச்சாலையிலிருந்து வழக்குக்காக அநுராதபுரம் கொண்டு வரப்பட்ட 2 கைதிகளும் அவர்களுடன் இணைந்து போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

முன்னரும் பல தடவைகள் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தமையினால் அவர்களது உடல் நிலை மிக பலவீனமாக உள்ளது என மருத்துவமனை தகவல்கள் தெரிவிக்கின்றன.



இந்த நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அரசியல் கைதிகளுக்கு சேலைனும், மருந்தும் வழங்கப்பட்டு வந்த நிலையில் அவர்கள் தமது போராட்டத்தை தீவிரப்படுத்துவதற்காக அதனையும் புறக்கணித்துள்ளனர்.

இதனால் அவர்களது உடல் நிலை மோசமாகியுள்ளது என அவர் கூறியுள்ளார்.

# ஜனாதிபதி தலைமையில் மன்னாரில் தேசிய சுற்றாடல் தின நிகழ்வு ஒக்.5இல்



தேசிய சுற்றாடல் தினத்தையொட்டி எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்டத்தின் சுற்றுச்சூழல் பாதிப்புக்கள் மற்றும் சவால்கள்' என்ற தொனிப்பொருளில் இடம்பெறவுள்ள நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வு தொடர்பான முன்னேற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம், கடந்த வெள்ளிக்கிழமை மாலை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் இடம் பெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கலந்து கொண்டிருந்தார்.

சுற்றாடல் அதிகார சபை உயரதிகாரிகள், ஜனாதிபதி செயலக உயரதிகாரிகள், சுற்றாடல் அமைச்சின் உயரதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் உட்பட பல்வேறு திணைக்களங்களின் உயரதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

அன்றைய தினம் மன்னார் மாவட்டத்தில் இடம்பெறவுள்ள மர நடுகை நிகழ்வு குறித்தும் இந்தக் கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டதுடன், சுற்றாடல் விழிப்பூட்டல் தொடர்பான பதாகைகள், சுவரொட்டிகள் போன்றவற்றை காட்சிக்கு வைத்தல் ஆகியன தொடர்பிலும் அன்றைய தினம் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இந்த நிகழ்வு இடம் பெறுவதோடு, மன்னார் மதவாச்சி பிரதான வீதி, தம்பனைக்குளம் 53 ஆம் கட்டை பகுதியில், மரம் நடுகை நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இதே வேளை மன்னார் மாவட்டத்தில் இந்த ஆண்டின் இறுதி மூன்று மாத காலத்திற்குள் 3 தேசிய நிகழ்வுகளை நடத்த ஜனாதிபதி செயலகத்தினால் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் அடிப்படையில் மூன்று தேசிய நிகழ்வுகளிலும் முதல் நிகழ்வாக எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேசிய சுற்றாடல் தினம் மன்னார் நகர சபை மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

அதே நேரம் மரம் நடுகை நிகழ்வுகள் மன்னார் – மதவாச்சி பிரதான வீதி தம்பனைக்குளம் 53 கட்டை பகுதியில் இடம் பெறவுள்ளது.

மேலும் எதிர் வரும் நவம்பர் 20 ஆம் திகதி தேசிய மீளாத் விழா இடம் பெறவுள்ளது. குறித்த மீளாத் விழா மன்னார் மாவட்டத்தின் முசலிப் பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் இடம்பெறவுள்ளது.

மேலும் தேசிய நத்தார் தினம் டிசெம்பர் 22 ஆம் திகதி மன்னாரில் இடம் பெறவுள்ளது. இந்த தேசிய நிகழ்வுகள் அனைத்திற் குமான ஏற்பாடுகளை மாவட்டச் செயலகத்துடன் இணைந்து ஜனாதிபதி செயலகம் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போதைவஸ்து தரையிறக்கப்படும் களமாக மாறியுள்ளது வடமராட்சி கிழக்குப் பகுதி!

## மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் தெரிவிப்பு

வடமாகாணத்தில் வடமராட்சி கிழக்கு பகுதியே போதைவஸ்து தரையிறக்கப்படும் களமாக மாறியுள்ளது என யாழ் மாவட்ட மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் தலைவர் குற்றச்சாட்டியுள்ளார்.

வடமாகாணத்தில் வடமராட்சி கிழக்கு பகுதியை போதைவஸ்து தரையிறக்கப்படும் இடமாக இருக்கிறது. இதனை அரசாங்கம் கட்டுப்படுத்த தவறியுள்ளது என யாழ். மாவட்ட மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் தலைவர் இ.முரளிதரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஊடகச் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

யாழ், மாவட்டத்தின் வடமராட்சி கிழக்குப் பகுதியில் தான் சட்டவிரோத மீன்பிடித் தொழில் காணப்படுகின்றது. சுருக்கு வலைகள் பயன்படுத்தப்படுவதுடன், அட்டை பிடிக்கும் நடவடிக்கையும் இடம் பெறுகிறது. மக்கள் இது தொடர்பில் போராடிதற்போது, பிரதேச செயலாளர் ஊடாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், வடமாகாணத்தில் வடமராட்சி கிழக்கு பகுதியே போதைவஸ்து களமாக இருக்கிறது. வடமராட்சி கிழக்கு பகுதியில் போதைவஸ்து இறக்கப்பட்டு அவை தென்பகுதிக்கு கொண்டு செல்லப்படுகிறது. முன்னர் மன்னார் பகுதியில் இருந்து போதைவஸ்து கடத்தப்பட்டது. தற்போது அது சுழன்று வடமராட்சி கிழக்கு பகுதிக்கு வந்துள்ளது. இதை அரசு தடை செய்யாமல் இருப்பது எங்களுக்கு சந்தேகமான பார்வையை உருவாக்கிறது.

இலங்கையில் சட்டத்தின்படி போதைவஸ்து தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் அதை அவர்கள் கட்டுப்படுத்தாமல் இருக்கிறார்கள். இதைச் சரியான முறையில் கட்டுப்படுத்தி போதைவஸ்து இறங்காமல் தடுக்க வேண்டியது அர சி ன் கடமையாக இருக்கிறது. ஆனால் போதைவஸ்து வருகை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு இருக்கிறது.

அண்மையில் கூட கடலில் போதைப்பொருள் பிடிபட்டதாக சொல்கிறார்கள். அதற்கு என்ன நடந்தது என்று தெரியாது. அதனுடன் தொடர்புடையவர்கள் வெளியில் வந்து நிற்கிறார்கள். வடமராட்சி கிழக்கு பகுதியில் போதை வஸ்தை இறக்காமல் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். சமூகம் சீர் கெட்டுச் செல்கிறது.

சிறுவர்கள் கூட கஞ்சாவுடன் திரிகிறார்கள். விடுதலைப் புலிகள் காலத்தில் வடமராட்சி பிரதேசம் ஒரு புனிதபிரதேசமாக இருந்தது. ஆனால் இன்று இவ்வாறு இருப்பதைப் பார்க்கும் போது அரசு ஊக்குவிக்கிறதா என்ற கேள்வி எழுகிறது.

அரசுக்குள் அதிகாரத்தில் உள்ள ஒருவர் கூட வடமராட்சி கிழக்கில் இருக்கிறார். ஆனாலும் கட்டுப்படுத்த முடியவில்லை. இன்று வடமராட்சி கிழக்கு சட்டவிரோத மீன்பிடி மற்றும் போதைப் பொருள் என்பவற்றால் அழிவடைகிறது. இது தொடர்பில் நாம் பல தடவை சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு தெரிவித்துள்ளோம். அவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்பதே எமது கோரிக்கை எனத் தெரிவித்தார்.

# உயர்தர மாணவர்களுக்கான புலமைப்பரிசில்; தகைமையுடையவர்கள் விண்ணப்பிக்கலாம்

கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்பில் கல்வி கற்பதற்காக ஜனாதிபதி நிதியத்தினால் வழங்கப்படும் புலமைப் பரிசில்களுக்காக ஜனாதிபதியின் செயலகத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்த குமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

புலமைப்பரிசில்களை எமது சமூக மாணவ, மாணவிகள் பூரணமாக பயன்படுத்திக்கொண்டு அதற்கான விண்ணப்பங்களை ஒப்படைக்க முன்வர வேண்டும்.

2017 ஆம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த.சாதாரண பரீட்சைக்கு முதல் தடவையாக தோற்றி அப் பரீட்சையில் சித்தியடைந்து 2020 ஆம் ஆண்டில் க.பொ.த. உயர்தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள பொருளாதார ரீதியில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கும் மாணவ, மாணவிகளுக்கு புலமைப் பரிசில்களை வழங்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார்.

விண்ணப்பதாரியின் குடும்பத்தின் மாத வருமானம் 10 ஆயிரம் ரூபாவுக்கும் மேற்படாதிருத்தல், அரச பாடசாலையில் கல்வி கற்றிருத்தல், 2017 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட க.பொ.த. சாதாரண பரீட்சைக்கு முதற் தடவையாக தோற்றி 2020 ஆம் ஆண்டில் க.பொ.த. உயர்தர வகுப்பில் கல்வி கற்பதற்கான பூரண தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல், விண்ணப்பதாரி தரம் 5 புலமைப்பரிசில் நிதியுதவிகள் பெறாதவராக இருத்தல் போன்ற தகைமைகள் உடையவர்கள் மேற்படி புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்க முடியும்.

புலமைப்பரிசில்கள் பெறுபவர்களுக்கு க.பொ.த. உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் வரை மாதாந்தம் 500 ரூபாவரை 24 மாதத்திற்கு புலமைப்பரிசில் வழங்கப்படும்.

விண்ணப்பதாரர்கள் உரிய மாதிரி அமைப்பைத் தழுவி தயாரித்துக்கொண்ட விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து தாம் க.பொ.த. சாதாரண பரீட்சைக்காக கற்றல் நடவடிக்கைகளில் மேற்கொண்ட பாடசாலை அதிபர்களிடம் மாத்திரம் 12.10.2018 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக ஒப்படைக்க வேண்டும் .பாடசாலை அதிபர் உரிய நடவடிக்கைகளின் பின்னர் தேர்வுகளை நடத்தி அதன் பின் வலயக் கல்வி பணிப்பாளர் தமது சிபார்சுகளுடன் கூடிய விண்ணப்பப்படிவங்களை 16.11.2018 ஆம் திகதிற்கு முன்னர் மாகாண கல்விப் பணிப்பாளரிடமும் ஒப்படைக்க வேண்டியிருப்பதால் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir



# பாலஸ்தீனத்தில் இஸ்ரேலின் தாக்குதலில் 2 சிறுவர்கள் உட்பட 6 பேர் உயிரிழப்பு!

## 210 பேர் படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் சிகிச்சை



ஜெரூசலேம், ஒக்.01

காசா எல்லை பகுதியில் இஸ்ரேல் படையினர் நடத்திய தாக்குதல்களில் 2 சிறுவர்கள் உட்பட 6 பேர் பலியாகி உள்ளனர் என்று தகவல்கள் வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளன.

பாலஸ்தீனத்தில் 1948 ஆம் ஆண்டு நடந்த போருக்கு பின்னர் அகதிகளாக சென்றவர்கள் மீண்டும் நாடு திரும்புவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது.

ஆனால் இதை இஸ்ரேல் தொடர்ந்து எதிர்த்து வருகிறது. இதனால் பாலஸ்தீனியர்கள் கடந்த மார்ச் மாதம் முதல் தொடர் போராட்டங்கள் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், காசா எல்லை பகுதியில் இஸ்ரேல் படையினர் நடத்திய தாக்குதல்களில் 2 சிறுவர்கள் உட்பட 6 பேர் பலியாகி உள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

12 வயதான நாசர் மோசாபிஹ் என்ற சிறுவன், தெற்கு காஸா பகுதியில் உள்ள கான்யூனிஸ் பகுதியில் இஸ்ரேல் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளான். இதே போன்று 14 வயதான முகமது அல் ஹூம் என்ற மற்றொரு சிறுவன் அல்புரேஜ் என்ற இடத்தில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளான்.

மேலும், 4 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 210 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

# ஈரான் அணு ஆயுத தவிர்ப்புக்கான ஒப்பந்தத்தில் தொடர்ந்து நீடிப்போம்!




அணு ஆயுத தவிர்ப்பு ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகினாலும் ஐரோப்பிய கூட்டமைப்பு ஒப்பந்தத்தில் தொடர்ந்து நீடிக்கும் என கூட்டமைப்பின் தலைவர் டொனால்ட் டஸ்க் தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றான ஈரான் கடந்த 2015 ஆம் ஆண்டு அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா, பிரான்ஸ், சீனா மற்றும் ஜேர்மனி ஆகிய வல்லரசு நாடுகளுடன் வரலாற்று சிறப்பு வாய்ந்த அணு ஆயுத தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டது.

ஈரான் அணு ஆயுத திட்டங்களை செயல்படுத்துவதை முடிவுக்கு கொண்டுவர வேண்டும், அதற்கு பதிலாக அந்த நாட்டின் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளை மேற்கத்திய நாடுகள் படிப்படியாக விலக்கிக்கொள்ள வேண்டும் என்பது இந்த ஒப்பந்தத்தின் சாராம்சம். இந்த ஒப்பந்தம் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஒபாமாவின் ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்டதாகும்.

ஆனால், இந்த ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகுகிறது என்று ஜனாதிபதி ட்ரம்ப் கடந்த சில மாதங்களுக்கு முன்பு அறிவித்தார்.

இந்தநிலையில் ஐரோப்பிய கூட்டமைப்பின் தலைவர் டொனால்ட் டஸ்க், நியூயோர்க் நகரில் ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினார்.

அப்போது அவர் கூறுகையில் –

'ஈரான் அணு ஆயுத தவிர்ப்பு ஒப்பந்தம், ஐரோப்பிய கூட்டமைப்புக்கும், பிராந்திய மற்றும் உலகளாவிய பாதுகாப்புக்கும் நல்லது. எனவே ஈரான் இந்த ஒப்பந்தத்தில் உறுதியாக இருக்கிறவரையில், ஐரோப்பிய கூட்டமைப்பும் நீடிப்பதில் உறுதி கொண்டு உள்ளது.'

மேலும், 'ஈரானின் பிராந்திய நடத்தை, கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனை குறித்த கவலைகள் ஆகியன தொடர்பில் பேச்சு நடத்துவதற்கும் இந்த ஒப்பந்தம் வாய்ப்பு ஏற்படுத்தித் தருகிறது' என்றும் குறிப்பிட்டார்.

# இந்தோனேசியாவின் நிலநடுக்கம், சுனாமியில் பலியானோர் எண்ணிக்கை 832 ஆக உயர்வு!



இந்தோனேஷியாவில் ஏற்பட்ட பாரிய நிலநடுக்கம் மற்றும் சுனாமியால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 832 ஆக நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகரித்துள்ளது.

மேலும், 500 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர் எனவும், நூற்றுக்கணக்கானோர் காணாமற்போயுள்ளமையால் உயிரிழப்புக்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனவும் அஞ்சப்படுகின்றது.

இந்தோனேஷியாவின் சுலேவேசியா தீவில் வெள்ளியன்று 7.5 ரிச்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கம் சுலேவேசியாவின் தாங்கலாவில் இருந்து வடகிழக்காக 56 கிலோ மீட்டர் தொலைவில், பூமிக்கு அடியில் 10 கிலோ மீட்டர் ஆழத்தில் ஏற்பட்டுள்ளது.

நிலநடுக்கத்தை அடுத்து பல இடங்களில் சுனாமி ஏற்பட்டதுடன், பாலு நகரில் 5 அடி உயரத்திற்கு எழும்பிய சுனாமி அலைகள் சுமார் மூன்று இலட்சம் மக்கள் வசிக்கும் பகுதியையும் தாக்கியது. இதனால் அந்த நகரமே மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நிலநடுக்கம் மற்றும் சுனாமியில் சிக்கி இது வரை சுமார் 832 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக ஏ.எவ்.பி. செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

கடல் அலையால் இழுத்துச் செல்லப்பட்ட பலரின் உடல்கள் நேற்று முதல் கடற்கரைகளில் ஒதுங்குவதாகத் தெரிவித்துள்ள அதிகாரிகள், நிலநடுக்கத்தால் ஏற்பட்ட இடிபாடுகளுக்குள் சிக்கியும் பலர் உயிரிழந்திருக்கலாம் என்றும் தற்போது தெரிவித்துள்ளனர்.

இந்த அனர்த்தங்களை அடுத்து 500 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளனர் என இந்தோனேஷிய அனர்த்த கட்டுப்பாட்டு முகவர் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதனால், அங்கிருந்த பல குடியிருப்புகள் உள்ளிட்ட கட்டடங்கள் தரைமட்டமாகியுள்ளன எனவும் அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பான பகுதிகளுக்கு அனுப்பிவைத்துள்ள அதிகாரிகள், மீட்பு நடவடிக்கைகளையும் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

வான்படையின் பண்ட பரிமாற்றல் விமானங்கள் மூலமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு நிவாரணப் பொருள்கள், மற்றும் மருத்துப் பொருள்கள் எடுத்துச் செல்லப்படுகின்றமையோடு, மருத்துவ உதவிக் குழுவினரும் துரிதமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே, மின்சார துண்டிப்பு மற்றும் தொடர்பாடல் வசதிகள் இன்னும் சீராகாத நிலையில், அங்குள்ள நிலைமைகளை அறிந்து கொள்வதற்கு அதிகாரிகள் கடும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர் என்பதும் பாதிக்கப்பட்ட சிலர் தொடர்ந்தும் வீதிகளில் தஞ்சமடைந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தேவையற்ற குற்றச்சாட்டு கூறுவதை நிறுத்துங்கள்!

## அமெரிக்காவுக்கு சீனா கண்டிப்பு

அமெரிக்க நாடாளுமன்றத் தேர்தலில் சீனா தலையிட முயற்சிக்கிறது என்பது போன்ற குற்றச்சாட்டுகளுக்கு அமெரிக்கா முடிவு கட்ட வேண்டும் என சீன வெளியுறவுத்துறை அமைச்சக செய்திதொடர்பாளர் ஜெங்சுவாங் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க் நகரில் ஐ.நா. பாதுகாப்புசபை கூட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கடந்த 26 ஆம் திகதி கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர், அமெரிக்காவில் நவம்பர் மாதம் நடக்க உள்ள நாடாளுமன்ற தேர்தலில் சீனா தலையிட முயற்சிப்பதாகவும், இது தனது நிர்வாகத்துக்கு எதிரான நடவடிக்கை என்றும் புகார் கூறினார். இது உலக அரங்கில் சலசலப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்தநிலையில், பீஜிங் நகரில் சீன வெளியுறவுத்துறை அமைச்சக செய்தி தொடர்பாளர் ஜெங் சுவாங் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவரிடம் ட்ரம்பின் புகார் குறித்து கேள்வி எழுப்பப் பட்டது. அதற்கு அவர் பதில் அளித்து கூறுகையில், பிற நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடுவதில்லை என்பது சீன வெளியுறவுக்கொள்கையின் கலாசாரம் ஆகும். இது உலக அளவில் பாராட்டைப்பெற்றுள்ளது என்றார்.

மேலும், எந்த நாடு, பிற நாடுகளின் உள் விவகாரங்களில் கூடுதலாக தலையிட்டு வருகிறது என்பதை சர்வதேச சமூகம் தெளிவாக அறிந்திருக்கிறது. தங்களது தேர்தலில் சீனா தலையிட முயற்சிக்கிறது என்பது போன்ற தேவையற்ற குற்றச்சாட்டுகளுக்கும், அவதூறுகளுக்கும் அமெரிக்கா முடிவு கட்ட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

# ஈராக்கில் மொடல் அழகியை சுட்டுக்கொன்ற தீவிரவாதிகள்!



பாக்தாத், ஒக்.01

ஈராக்கின் பிரபல மொடல் அழகியை பாக்தாத்தில் தீவிரவாதிகள் சுட்டுக்கொன்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இவரது கொலைக்கு ஏராளமானோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ஈராக்கின் பிரபல இளம் மொடல் அழகி தாரா பாரஸ் (வயது 22), இவரது உடை மற்றும் பல வண்ண சிகை அலங்காரம், கையில் பச்சை குத்திய விதம் போன்றவை பலரையும் கவர்ந்தன. இன்ஸ்டாகிராம் பக்கத்தில் இவரை 28 லட்சத்து 70 ஆயிரம் பேர் பின்தொடர்ந்தனர்.

இவரது அழகு, திறமை மற்றும் வாழ்க்கை முறை ஆகியன ஈராக் மக்களை பெரிதும் கவர்ந்தன. எனவே லட்சக்கணக்கானோர் அவரது ரசிகர்களாக திகழ்ந்தனர். ஆனால் இவரது ஸ்டைலான வாழ்க்கை முறை தீவிரவாதிகளுக்குப் பிடிக்கவில்லை. கொலை மிரட்டல் விடுத்து வந்தனர்.

இவரது சொந்த ஊர் பாக்தாத். ஆனால் அங்கு வசிக்காமல் குர்திஸ்தானில் தங்கியிருந்தார். எப்போதாவதுதான் பாக்தாத் செல்வார். இந்த நிலையில் ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்க பாக்தாத் சென்று இருந்தார்.

அப்போது அவரை சில தீவிரவாதிகள் சரமாரியாகச் சுட்டனர். அதில் 3 குண்டுகள் அவரது உடலில் பாய்ந்தன. இதனால் அவர் ரத்த வெள்ளத்தில் பரிதாபமாக இறந்தார்.

இவரது கொலைக்கு ஏராளமானோர் கண்டனம் தெரிவித்துள்ளனர். பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் அவற்றைப் பதிவு செய்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir



# கொலையாளிகளை மகிமைப்படுத்துகின்ற பாகிஸ்தானுடன் இந்தியா பேச்சு நடத்தாது என ஐ.நாவில் சுஷ்மா விளக்கம்!

நியூயோர்க்,ஒக்.01

ஐ.நாவில் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்ட இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ், இந்தியா – பாகிஸ்தான் பேச்சு தடைப்பட்டதற்கான காரணத்தை விளக்கியுள்ளார்.

ஐ.நாவின் 73ஆவது பொதுக்கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பேசிய இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர், பேச்சின் மூலமாக பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் இந்தியா, பேச்சுக்கான அழைப்பை நாசப்படுத்தியது எனக் கூறுவது உண்மைக்குப் புறம்பானது என தெரிவித்துள்ளார்.



இந்தியா – பாகிஸ்தான் இடையே பல முறை பேச்சுக்கு முடிவு செய்யப்பட்டது.

பேச்சு ரத்து செய்யப்பட்டால் அதற்கு முழுகாரணம்பாகிஸ்தான்நடந்துகொள்ளும் முறைமைதான் எனவும் சுஷ்மா சுவராஜ் கடுமையாகத் தாக்கியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்தியாவில் பதவி ஏற்கும் ஒவ்வொரு அரசும் பாகிஸ்தானுடன் அமைதியை நிலைநாட்ட முயற்சித்து வந்தது. கடந்த 2016 ஆம் ஆண்டு டிசம்பரில் நானே நேரடியாகச் சென்று இருநாட்டு உறவு குறித்து பேச்சு நடத்தினேன். அதேசமயம், 2017 ஜனவரியில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் தாக்குதலை பரிசாக அளித்தனர்.


மேலும், இந்த முறை புதிய பிரதமர் இம்ரான் கானின் பேச்சுக்கான அழைப்பை ஏற்ற சிறிது நேரத்தில், பயங்கரவாதிகள் தாக்குதலில் இந்திய வீரர்கள் 3 பேர் பலி என செய்திகள் வெளியாகின.

இதுபோன்ற பயங்கரவாத செயல்களுக்கு மத்தியில் எவ்வாறு அமைதிப் பேச்சை நடத்துவது? – என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் கேள்வியெழுப்பினார்.

மேலும், பொய் குற்றச்சாட்டுகளை சுமத்துவது பாகிஸ்தானின் திறமைகளில் ஒன்று எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவுடனான பிரச்சினைகளை யுத்தத்தின் மூலம் தீர்க்க முடியாது!

## பாக். வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவிப்பு



நியூயோர்க்,ஒக்.01

இந்தியாவுடனான எந்தப் பிரச்சினையையும் போரால் தீர்த்துவிடமுடியாது என பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சர் மெஹ்மூத் குரேஷி குறிப்பிட்டுள்ளார்.

நியூயோர்க் நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபை கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக பாகிஸ்தான் நாட்டின் புதிய வெளியுறவுத்துறை அமைச்சர் மெஹ்மூத் குரேஷி அமெரிக்கா சென்றுள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளில் மிகவும் பிரசித்திபெற்ற அல்ஜசீரா தொலைக்காட்சிக்கு அவர் சமீபத்தில் பேட்டியளித்தார்.

இந்தியாவுடனான உறவுகளில் ஏற்பட்டுள்ள பின்னடைவு தொடர்பாக இந்த பேட்டியின்போது கருத்து தெரிவித்த மெஹ்மூத் குரேஷி, அமைதிக்கான வழியில் இந்தியா ஓரடி முன்னெடுத்து வைத்தால் பாகிஸ்தான் இரண்டடி எடுத்து வைக்கத் தயாராக இருக்கிறது என்று பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் முன்னர் தெரிவித்திருந்தமையைச் சுட்டிக் காட்டினார்.

நாங்கள் அமைதிக்கான முதலடியை எடுத்து வைத்தோம். இருநாடுகளுக்கும் இடையில் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. இருநாடுகளுமே அணு ஆயுத வலிமைமிக்க நாடுகளாக இருக்கும் நிலையில் பிரச்சினைகளைப் போரினால் சரிசெய்ய முடியாது.

போர்முறை என்பது இதில் தீர்வாகாது. பேச்சு மட்டும் தான் ஒரே தீர்வாகும்.– எனவும் அவர் குறிப்பிட்டார்.

### எதிர்க்கட்சியாக பொதுமக்களை ஈர்ப்பதற்கு காங்கிரஸ் தவறிவிட்டது என்கின்றார் மோடி!

தமது பாரதீய ஜனதாக் கட்சியின் வாக்குச்சாவடி உறுப்பினர்களிடையே 'நமோ அப்' மூலம் பேசிய பிரதமர் மோடி, காங்கிரஸ் ஓர் எதிர்க்கட்சியாக மக்களை ஈர்க்கத் தவறி விட்டது என்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் – கடந்த காங்கிரஸ் ஆட்சின்போது விலையேற்றத்தால் மக்கள் தவித்து வந்தமையையும், இப்போது விலையேற்றம் இல்லாமல் இருப்பதையும் உணர முடியும்.

காங்கிரஸ் கட்சியின் பொய் பிரசாரங்கள் மூலம் மக்களின் கவனம் திசைத்திருப்பப்படுகிறது. அதனை பா.ஜ.க. நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மாற்றி, மக்களுக்கு புரிதலை ஏற்படுத்த உழைக்க வேண்டும் எனவும் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

# திருச்சி கார் விபத்தில் 8 பேர் உயிரிழப்பு!

திருச்சி மாவட்டம், சமயபுரம் அருகே நின்றுகொண்டிருந்த லொறி மீது கார் மோதி விபத்துக்குள்ளானதில் 8 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

சென்னையில் இருந்து திருச்சி நோக்கி சென்ற கார் சமயபுரம் சுங்கச்சாவடி அருகே தேசிய நெடுஞ்சாலையின் ஓரம் நின்று கொண்டிருந்த லொறி மீது மோதி விபத்துக்குள்ளானது.

அதிகாலையில் நிகழ்ந்த இந்த கோர விபத்தில் 2 குழந்தைகள், 3 பெண்கள் மற்றும் 3 ஆண்கள் உட்பட 8 பேர் சம்பவ இடத்திலேயே உடல்நசுங்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

# கூச்சலிட்டதை கண்டித்த பேராசிரியரை தமது காலில் விழவைத்த மாணவர்கள்!

## ராகுல் காந்தி கண்டனம்

மத்தியப் பிரதேசத்தில் பேராசிரியரை காலில் விழவைத்த மாணவர்களுக்கு காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மத்தியப் பிரதேசம் மாநிலம், மன்சாவுர் மாவட்டத்தில் உள்ள கல்லூரி ஒன்றில் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டதை கண்டித்து மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஆளும் பா.ஜ க. ஆதரவு மாணவர்கள் கல்லூரி நிர்வாகத்துக்கு எதிராக வகுப்பறைக்குவெளியில்கோஷங்களை எழுப்பிக்கூச்சலிட்டனர்.

அப்போது வகுப்பில் பாடம் நடத்திக்கொண்டிருந்த பேராசிரியர் தினேஷ் குப்தா என்பவர் மாணவர்கள் கோஷங்கள் எழுப்புவதை கண்டித்து கலைந்து செல்லுமாறு கூறினார். இதனால், ஆத்திரம் அடைந்த மாணவர்கள் பேராசிரியர் மீது காவல் நிலையத்தில் புகார் அளிக்கப் போகிறார்கள் என மிரட்டினர். அவ்வாறு புகார் அளிக்காமல் இருக்க வேண்டுமானால் பேராசிரியர் தினேஷ் குப்தா காலில் விழுந்து மன்னிப்பு கேட்க வேண்டும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மிரட்டலுக்கு பணிந்த பேராசிரியர் மாணவர்களின் காலை தொட்டு மன்னிப்பு கேட்டார், அதை வீடியோ எடுத்த சிலர் இணையத்தில் பரவவிட்டமையால் இந்த



விவகாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில், மாணவர்களின் இந்தச் செயலுக்கு காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். பேராசிரியர் மன்னிப்பு கேட்ட வீடியோவை தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர், 'ஆளும் பா.ஜ.க. ஆதரவு மாணவர்கள் ஆசிரியரை அவமதித்துள்ளனர். ஆசிரியர்களை கடவுளாக மதிக்கும் நம் நாட்டில், மாணவர்கள் ஆசிரியரை மிரட்டுவதிலும், ஆசிரியர் மாணவர்களின் காலை தொடுவதிலும் இருந்து எவ்வகையான மதிப்பு வெளிப்படுகிறது?, அறிவுடையவர்கள் செய்யும் செயலா இது ?' என ராகுல் காந்தி மாணவர்களைக் கண்டித்துள்ளார்.

**அரசியல் கைதிகள்...** (4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் சபையில் உறுப்புரிமை கொண்ட ஒரு தேசத்துக்கு – இப்படியான மனித குல விரோத, இனக் குரோத அடிப்படையிலான – போக்கு எள்ளவும் பொருத்தமற்றது.

இந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் முயற்சிகளை மேற்கொண்டபோது சட்டமா அதிபர் நாட்டில் இல்லை எனவும், அவர் நாடு திரும்பியதும் அது தொடர்பில் பேசப்படும் எனவும் கூறப்பட்டது. அதன் பின்னர் பிரதமர், நீதி அமைச்சர், சட்டமா அதிபர் ஆகியோருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகியோர் அலரிமாளிகையில் பேச்சு நடத்தியபோது ஜனாதிபதி அமெரிக்காவிலிருந்து திரும்பியதும் மீண்டும் பேச்சு இடம்பெறும் எனவும் கூறப்பட்டது.

எடுக்கப்படும் ஒவ்வொரு முயற்சியின்போதும் ஒவ்வொரு காரணம் கூறப்பட்டு நடவடிக்கைகள் ஒத்தி வைக்கப்பட்டுக் கொண்டு வருவதை நாம் அவதானிக்க முடியும். ஆனால், உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் ஒவ்வொரு நிமிடமும் சாவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறார்கள். காலதாமதம் செய்யப்படும் ஒவ்வொரு நாளும் அவர்கள் சாவை நோக்கித் தள்ளப்படும் நாளே! அதிலும் ஒரு கைதி சிறுநீரகப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளார். இன்னொருவர் ஏற்கனவே பாரிசவாதப் பாதிப்புக்கு உள்ளானவர் என்றும் அவர் மீண்டும் அதே ஆபத்துக்கு உட்படும் ஆபத்து உண்டு எனவும் கூறப்படுகின்றது. ஆனால், அரச தரப்பினர் கைதிகளின் உயிராபத்து நிலை தொடர்பாகவோ, எதிர்கொள்ளக்கூடிய சாவு பற்றியோ பொருட்படுத்துபவர்களாகத் தெரியவில்லை.

ஒருபுறம் அரசியல் கைதிகளைச் சாவை நோக்கித் தள்ளிக் கொண்டு வவுனியாவில் புனர்வாழ்வு பெற்ற கைதிகளை விடுவித்துப் பெரும் விளம்பரம் செய்து சர்வதேச சமூகத்துக்கு வாணவேடிக்கை காட்டிக் கொண்டிருக்கின்றனர். பொதுமக்கள், அரசியல் கைதிகளை விடுதலை செய்யும்படி யாழ்ப்பாணம், மன்னார், வவுனியாபோன்ற இடங்களில்மட்டுமன்றிக்கொழும்பிலும் போராட்டங்களை நடத்தியுள்ளனர்.

அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள்பாதுகாப்புச்செயலர்கோட்டாபய ஆகியோரைக் கொலைச் செய்யச் சதி செய்ததாக பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி நாலந்த சில்வா பணி இடைநீக்கம் செய்யப்பட்டார். இவ்விடயம் தொடர்பான விசாரணையின்போது ஜனாதிபதியை கிழக்கு மாகாணத்தில் வைத்துக் கொலை செய்துவிட்டு பழியை முன்னாள் புலி உறுப்பினரான புஷ்பராஜன் தலையில் சுமத்தத் திட்டம்தீட்டப்பட்டதாகத்தகவல்கள் வெளியாகியிருந்தன.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் மேற் கொள்ளப்படும்கைதுகளும்விசாரணைகளும்எப்படி அமைந்திருக்கும் என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும்.

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் உடனடியாக இந்தப் பிரச்சினையில் தலையிட்டு மன்னிப்பின் கீழ் தமிழ் அரசியல்கைதிகளை விடுவிக்க வேண்டும். இல்லையேல் குறுகியகால புனர்வாழ்வில் அவர்களை விடுதலை செய்ய வேண்டும். அவர்களுக்கு உயிராபத்து ஏற்படும் வரை விட்டுவிட்டு அவர்கள் ஏற்கனவே இருந்த நோய் காரணமாகவே உயிரிழந்தனர் என்றோ, இயற்கை உயிரிழப்பு என்றோ காரணங்களைக் கண்டுபிடித்து முன்வைப்பதில் அர்த்தமில்லை – என்றுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir



## விக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சொல்கிறார், நாளைமறுதினம் வேறொரு கருத்தைச் சொல்கிறார். இவை எல்லாவற்றையும் ஞாபகத்தில் வைத்து அவருக்குப் பதில் சொல்வது இயலாத காரியம். ஆகவே அவர் ஒரு குறித்த நிலைப்பாட்டுக்கு வந்த பின்னர் நாங்கள் பதிலளிப்பதுதான் சிறப்பாக இருக்கும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தமது இல்லத்தில் நேற்றுத் தாம் நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

'எனது செயற்பாடுகள் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள சிலர் மகிழ்ச்சியடையவில்லை என்பது எனக்குத் தெரியும். நான் திரும்பத் திரும்ப, ஒரு நாடாளுமன்ற உறுப்பினரால் விமர்சிக்கப்படுகிறேன். முரண்பாட்டு அரசியலைத் தொடர நான் விரும்பவில்லை' – என்று வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன், சண்டே ரைம்ஸின் நேற்றைய வெளியீட்டுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் செய்தியாளர் ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன், கூட்டமைப்பின் முதலமைச்சராக ஐந்து ஆண்டுகள் பங்கேற்றுள்ளார். வடக்கு மாகாண சபைத் தேர்தல் காலத்தையும் எடுத்துக்கொண்டால் 5 ஆண்டுகளுக்கு மேலாக அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுடைய உறுப்பினராகவும் உத்தியோகபூர்வமாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

இந்த ஐந்து ஆண்டுகளில் இப்போதுதான் முதன்முறையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்யவேண்டும் என்ற கருத்தை அவர் சொல்கிறார். இந்த ஐந்து ஆண்டு காலமும் இந்த யோசனை அவருக்கு ஏன் வரவில்லை என்று எனக்குத் தெரியாது என்றும் சுமந்திரன் தெரிவித்தார்.

'தமிழரசுக்கட்சி, தமிழ்தேசியக் கூட்டமைப்பைப் பதிவு செய்ய விடாது என்றும்' தேர்தலில் வாக்குப் பெறும் இயந்திரமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழரசுக் கட்சி பயன்படுத்துகின்றது என்றும் சுரேஷ் பிறேமச்சந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளாரே?' – என்று செய்தியாளரால் கேள்வி எழுப்பப்பட்டது.

சுரேஷ் பிறேமச்சந்திரனும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிலே ஓர் அங்கத்துவக் கட்சியாக இருந்தவர். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்களால் மிக மோசமாக நிராகரிக்கப்பட்ட பிறகு அவர் தனது கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே விமர்சிக்கத் தொடங்கினார். பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நேரம் அவரோடு, இவரோடு சேர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகிப் போட்டியிடுவதாகப் போய் இறுதியில் ஆனந்தசங்கரியுடன் சேர்ந்து போட்டியிட்டு அதிலும் பாரதூரமான தோல்வியைச் சந்தித்தவர்.

ஆகையால் தங்களை மக்கள் நிராகரிப்பதற்கான காரணங்களை மற்றவர்கள் மீது சுமத்துவது அவருடைய பழக்க தோசமாக இருக்கிறது. அவரைப் பற்றி நான் வேறு ஒன்றும் சொல்லவிரும்பவில்லை – என்று சுமந்திரன் பதிலளித்தார். (ஐ–7)

## டிசெ.31...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டும். அப்படிச் செய்வதினின்றும் அரசு தவறுமானால், தொடர்ந்து காலத்தை இழுத்தடிக்குமானால், அந்த அரசுக்கு பல்வேறு வழிகளிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அளித்து வந்த ஆதரவு முடிவுறுத்தப்பட வேண்டும்.

– இவ்வாறு காலக்கெடுவுடன் கூடிய நிபந்தனை அடங்கிய தீர்மானம் ஒன்று நேற்று மட்டக்களப்பில் நடந்த தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோவின்) தேசிய மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யுத்தக் குற்ற விடயத்தில் சமரசத்துக்கோ, விட்டுக் கொடுப்புக்கோ இடமேயில்லை. ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் தானும் சேர்ந்து நிறைவேற்றிய தீர்மானங்களின் வாசகங்களுக்கு அமைய இலங்கை நடந்துகொள்வதை ஐ.நா. உறுதிப்படுத்த வேண் டும். இவ்விடயத்தில் – பொறுப்புக் கூறலில் – இலங்கை தவறிழைக்குமானால் ஐ.நா. மன்றம் இலங்கைக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். – என்று கோரும் தீர்மானமும் அங்கு நிறைவேற்றப்படடுள்ளது.

ரெலோவின் தேசிய மாநாடு மட்டக்களப்பு அமெரிக்கன் மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது.

## இறுதிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார்.

வடக்கிலிருந்து படைமுகாம்களை அகற்றுவது குறித்து அரசு ஆழமாகச் சிந்திக்கவேண்டும் எனவும் அவர் கூறினார்.

சிங்களத் தொலைக்காட்சியொன்றில் நேற்று மாலை ஒளிபரப்பாகிய அரசியல் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே பொன்சேகா மேற்கண்டவாறு கூறினார்.

போரின் இறுதிக்கட்டம் குறித்து யார் தவறான கருத்துகளை வெளியிட்டாலும் – உண்மை நிலைவரத்தை தெளிவுபடுத்த நான் தயங்கமாட்டேன். போர் காலத்தில் பாதுகாப்பு அமைச்சை விட பலம்பொருந்திய நபராகவே கோட்டாபய ராஜபக்ஷ இருந்தார். எனவேதான் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர் வெளிநாடு சென்றிருக்ககூடும்.

போரின் இறுதிகட்டத்தில் இந்தியா எவ்வித அழுத்தங்களையும் கொடுக்கவில்லை. போரை முடிப்பதற்கான ஆசீர்வாதத்தையே அந்நாடு வழங்கியது.

நான் யாரிடமும் இதுவரை மன்னிப்புக் கேட்டதில்லை. அவ்வாறு கேட்கும் வகையில் நடந்துகொண்டதும் இல்லை. இனியும் கேட்கப்போவதுமில்லை. உண்மையைப் பேசுவதற்காகவே அரசியலுக்கு வந்தேன். ஆகவே, என்னால் கைகட்டி வேடிக்கை பார்த்து ஆமாம்சாமி போடமுடியாது. அவ்வாறான நபரெனில் மஹிந்த தரப்புடனேயே இருந்திருப்பேன். தவறுகள் இடம் பெற்றதால்தான் அவற்றைச் சுட்டிக்காட்டி வெளியேறினேன்.

அரசுக்குள் இருப்பவர்களே காலைவார முற்படுகின்றனர். என்னால் இரட்டைவேடம்போட முடியாது. அதனால்தான் வெளிப்படையாகப் பேசிவருகின்றேன்.

அதேவேளை, சட்டம், ஒழுங்கு அமைச்சுப் பதவி எனக்கு வழங்கப்பட்டிருக்குமானால் குற்றவாளிகளுக்கு நிச்சயம் தண்டனை கிடைத்திருக்கும்.

வடக்கில் காணிகள் விடுவிக்கப்பட்டு வருகின்றன. எனினும், படைமுகாம்களை விடுவிப்பது குறித்து ஆழமாகச் சிந்திக்க வேண்டும். அதை அரசியல் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் கணிப்பிடக்கூடாது. கடந்தகாலங்களில் சிற்சில குறைப்பாடுகள் நடந்துள்ளன. – என்றார். (ஐ)

## விரைவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பியான ரவி கருணாநாயக்க, சு.கவின் எம்.பியான தயாசிறி ஜயசேகர ஆகியோருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படலாம் எனவும், சில அமைச்சுகளின் விடயதானங்கள் கைமாறவுள்ளன எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறிப்பாக சட்டம், ஒழுங்கு அமைச்சை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர வேண்டும் எனப் பல தரப்பினரும் கோரிக்கை விடுத்து வருவதால் அதை ஜனாதிபதி செய்வதற்குரிய சாத்தியக்கூறுகளும் பிரகாசமாகத் தென்படுகின்றன.

எனினும், இவை தொடர்பில் இன்னும் உத்தியோகபூர்வமாக எதுவும் அறிவிக்கப்படவில்லை.

அதேவேளை, நிதி அமைச்சின் செயலராக உள்ள ஆர்.எச்.எஸ். சமரதுங்க ஓய்வுபெறுகின்றமையால், அவருக்குப் பதிலாக தனது தெரிவான ஒருவரை ஜனாதிபதி நியமிக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. நாளை நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் இது குறித்து ஆராயப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

## யுத்தப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதி தருணத்தில் பொதுமக்களிற்கான பாதுகாப்பு வலயங்கள் என அறிவிக்கப்பட்ட பகுதியில் பெருமளவில் காணப்பட்ட மக்கள் மத்தியில் கொத்துக்குண்டுகள் பயன்படுத்தப்பட்டமையை அனைத்து ஆதாரங்களும் உறுதி செய்கின்றன என சர்வதேச நீதி மற்றும் உண்மைக்கான திட்டத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் யஸ்மின் சூக்கா மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கை படையினர் தடை செய்யப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தினர் என்ற குற்றச்சாட்டுகள் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டுள்ளன எனவும் குறிப்பிட்டுள்ள அவர், 2016இல் ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளரே இதற்கான சுயாதீன சர்வதேச விசாரணையை கோரியிருந்தார், எனினும் அது நடைபெறவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

தடைசெய்யப்பட்ட ஆயுதத்தினை முற்றாக ஒழிப்பதற்காக குரல்கொடுக்கும் அமைப்பின் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொண்டுள்ள இலங்கை அதன் கடந்த காலத்தை மறைக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளிற்கும் நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் அமைப்புகளிற்கும் பணியாற்றியுள்ள தமிழர்கள் தாங்கள் நேரடியாக கிளஸ்டர் (கொத்துக்) குண்டுகளைப் பார்த்தனர் எனத் தெரிவித்துள்ளனர் என யஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற பகுதியில் பணியாற்றிய மருத்துவர்கள் பெண்ணொருவரின் காலில் இருந்து கிளஸ்டர் குண்டுகளின் சிதறல்களை அகற்றியுள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ள அவர், யுத்தத்தின் பின்னர் கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் பல பகுதிகளில் கொத்துக்குண்டுகளின் சிதறல்களைக் கண்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இராணுவத்தினர் அந்த பகுதிகளைச் சுற்றி வளைத்துள்ளதுடன் பொதுமக்கள் அங்கு செல்வதை தடை செய்துள்ளனர் எனவும் யஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் தான் கொத்துக் குண்டுகளைப் பயன்படுத்தியதை மறுத்துவருவதன் மூலம் அதன் காரணமாக பாதிக்கப்பட்டவர்களிற்கும் அவர்களது குடும்பத்தவர்களிற்கும் அவமரியாதை செய்கின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## நாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது ஐக்கியநாடுகளின் பொதுச் செயலாளர், பொதுநலவாய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் மற்றும் பல உலக நாடுகளின் தலைவர்களையும் ஜனாதிபதி சந்தித்தமை குறிப்பிடத்தக்கது.

## மானிப்பாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளார். அவரிடமிருந்து இரண்டு வாள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த முக்கிய சந்தேகநபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இவர் மானிப்பாய் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை மானிப்பாயில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பாக ஏனைய சந்தேகநபர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களும் விரைவில் கைது செய்யப்படுவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## சி.ஐ.டியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணை நடத்தவுள்ளனர் என்று சட்டம், ஒழுங்கு பிரதியமைச்சர் நளின் பண்டார தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்டவர்களை கொலைசெய்யும் சூழ்ச்சித் திட்டத்துடன் தொடர்புபட்டுள்ளார் என பிரதிபொலிஸ்மா அதிபர் நாலக்க டி சில்வாவுக்கு எதிராக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அவருக்கு எதிராக முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கை தொடர்பில் வினவியபோதே சட்டம், ஒழுங்கு பிரதியமைச்சர் இந்த தகவலை வெளியிட்டார்.

பிரமுகர்கள் கொலை சூழ்ச்சித் திட்டம் தொடர்பில் சி.ஐ.டி.யினர் பலகோணங்களில் விசாரணைகளை நடத்திவருகின்றனர். அந்த வகையில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக்க டி சில்வாவிடமும் விரைவில் விசாரணை நடத்தப்படும்.

நாமல் குமார என்ற நபர் சர்ச்சைக்குரிய நபராக இருக்கிறார். தற்போது இருகுழுக்களுக்கிடையே மோதல் ஏற்பட்டுள்ளது. இருதரப்பினரும் வெவ்வேறு கோணங்களில் கருத்துகளை முன்வைத்து வருகின்றனர். இவை குறித்து பாதுகாப்பு தரப்பினர் ஆழமாக ஆராய்ந்து வருகின்றனர்.

அதேவேளை, ஜனாதிபதி உள்ளிட்ட பிரமுகர்களின் உயிருக்குபெரும் ஆபத்து இருப்பதாக அரச புலனாய்வுப் பிரிவுக்குத் தகவல் கிடைக்கவில்லை. எது, எப்படியோ பிரமுகர்களுக்கான பாதுகாப்பு விடயத்தில் அரசு விழிப்பாகவே இருக்கின்றது அரச உயர்மட்ட பிரமுகர்களின் பாதுகாப்பு குறித்து தீவிரமாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது அரச உளவுத்துறை ஊாராகவே இருக் கின்றது என்றும், என்றும் சட்டம், ஒழுங்கு பிரதியமைச்சர் கூறினார். (ஐ)

## நாளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் பங்கேற்குமாறு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

'பிரமுகர்கள் கொலை சூழ்ச்சி', ஜனாதிபதியின் ஐ.நா. உரை, மாகாண சபைத் தேர்தல் இழுத்தடிப்பு உள்ளிட்ட விவகாரங்களால் தெற்கு அரசியலில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இவை தொடர்பிலும், முக்கிய சில அமைச்சரவைப் பத்திரங்கள் சம்பந்தமாகவும் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது.

ஐ.நா. பொதுச் சபையின் 73ஆவது கூட்டத் தொடரில் பங்கேற்கச் சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நாடு திரும்பினார். (ஐ)

## ஐ.ஜி.பியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணமாக கடைசி நேரத்தில் இலங்கைப் பொலிஸ்மா அதிபரும் அவருடன் சேர்ந்து நான்கு அதிகாரிகளும் முன்னெடுக்கவிருந்த பயண ஒழுங்குகளை ஏற்பாட்டாளர்கள் ரத்துச் செய்தனர் எனஸ்கொட்லாந்தில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

இலங்கைப் பொலிஸார் தொடர்ந்தும் சித்திரவதை மற்றும் துன்புறுத்தலை விசாரணை ஆயுதங்களாகப் பயன்படுத்திவருகையில் அந்த பொலிஸாரின் தலைவரை வரவேற்பதன் மூலம் அந்த இழிவான செயற்பாட்டை ஸ்கொட்லாந்து பொலிஸ் அங்கீகரிக்கக்கூடாது என அங்குள்ள தமிழ்ச் சமூகத்தினர் பலமாக எதிர்த்து வந்தனர்.

இலங்கைப் பொலிஸ் மா அதிபரின் வருகை சமயத்தில் ஸ்கொட்லாந்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவும் அங்குள்ள தமிழர் தயாராகி வந்த சூழலிலேயே, இலங்கை பொலிஸ்மா அதிபரின் விஜயத்துடன் தொடர்புடைய நிகழ்வு ஒழுங்குகளை ஏற்பாட்டாளர்கள் கடைசி நேரத்தில் ரத்துச் செய்தனர் என்று கூறப்படுகின்றது. (உ)

## போர்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமல் வீரவன்ஸ நேற்று வலியுறுத்தியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான 'எலிய' அமைப்பின் கருத்தரங்கில் கலந்துகொடு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

இறுதிக்கட்டப்போரின்போது ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த கோட்டாபய, இராணுவத் தளபதியாக இருந்த பொன்சேகா ஆகியோர் நாட்டைவிட்டுத் தப்பியோடினர் என்றும், இறுதி இரண்டு வாரங்களுக்கு போருக்கு தானே தலைமை வழங்கினார் என்றும் தற்போதைய ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

போரின் இறுதி இரண்டு வாரங்களில்தான் போர்க்குற்றச்சாட்டுகள் நடந்தன என்று மேற்குலக நாடுகளால் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனவே, இறுதி இரண்டு வாரங்களுக்கு உரிமைகோரும் ஜனாதிபதி, போர்க்குற்றச்சாட்டுகளுக்கும் பொறுப்புக் கூறவேண்டும். அவ்வாறுகூறி படையினரை காப்பாற்ற வேண்டும். – என்றும் விமல் குறிப்பிட்டார். (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir



# ஹத்துருசிங்க – மத்தியூஸ் இடையிலான மோதலுக்கு தீர்வைக் காணவேண்டும்




இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளர் சண்டிக ஹத்துருசிங்கவும் முன்னாள் அணித்தலைவர் மத்தியூஸும் தங்களிற்குகிடையிலான கருத்துவேறுபாடுகளிற்கு கூடிய விரைவில் தீர்வை காணவேண்டும் என குமார் சங்கக்கார வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையின் ஒரு நாள் அணியின் எதிர்காலத்திற்கு இது அவசியம் என தெரிவித்துள்ள சங்கக்கார, தினேஸ் சந்திமலும் இதற்கு உதவவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கு இடையிலான தொடர்பாடலில் ஏற்பட்டுள்ள குழப்பநிலைக்கு தீர்வை காணவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அணித்தலைவர் முகாமைத்துவம் மற்றும் சம்பந்தப்பட்ட வீரர் ஆகியோருக்கு மத்தியில் இடம்பெறும் வெளிப்படையான நேரடியான நேர்மையான பேச்சுகள் மூலம் இதற்கு தீர்வைக் காணவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்வாறான முடிவு ஏன் எடுக்கப்பட்டது என்பது குறித்து தெளிவான செய்தி பொதுமக்களிற்கு செல்வது அவசியம் அதேவேளை அவசரப்பட்டு தீர்மானங்களை எடுக்க கூடாது எனவும் சங்ககார தெரிவித்துள்ளார்.

சண்டிக ஹத்துருசிங்கவின் தந்திரோபாயங்களை பார்க்கும்போது மத்தியுஸ் மீண்டும் அணியில் விரைவில் இடம்பெறுவார் என நான் எதிர்பார்க்கின்றேன் எனவும் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஒரு நாள் அணிக்கும் மத்தியூஸ் முக்கியமானவர் அவர் விரைவில் மீண்டும் பந்து வீச ஆரம்பிப்பதும் அவசியம் எனவும் சங்கக்கார கூறினார்.

அவரின் கடந்த காலங்களை எடுத்துப்பார்த்தால் அவர் அணிக்கு எவ்வளவு முக்கியமானவர் என்பதை உணரலாம். அவர் மீண்டும் பந்து வீசுவது அவசியம் அது அவருக்கு மீண்டும் தன்னம்பிக்கையையும் வழங்கும் என தெரிவித்துள்ள அவர், இலங்கை அணிக்கும் இது சாதகமானதாக விளங்கும். யார் அணித்தலைவராகயிருந்தாலும் இது அவருக்கு பலம் சேர்க்கும். இலங்கையின் உலகக் கிண்ண வெற்றிகளுக்கு இது மிகவும் முக்கியமானதாக விளங்கப் போகின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

விக்கெட்களிற்கு இடையில் ஓடுவது குறித்து நான் அதிகம் கவலைப்படவில்லை. நானும் இந்த விடயத்தில் சிறந்து விளங்கவில்லை எனவும் தெரிவித்துள்ள அவர், ஒரே நிலையில் தொடர்ந்து விளையாடினால் துடுப்பாட்ட வீரர்கள் மத்தியிலான தொடர்பாடல் வலுப்பெறும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மத்தியூஸ் எதிர்காலத்தில் ஒருநாள் போட்டிகளில் நான்காவது வீரராக களமிறங்கவேண்டும். அவர் அணியின் துடுப்பாட்டத்திற்கு வடிவம் கொடுக்க வேண்டும் எனவும் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

# டோனியின் அடுத்த அபார சாதனை



ஆசியக் கிண்ண இறுதிப்போட்டியில் 2 துடுப்பாட்ட வீரர்களை டோனி ஸ்டம் செய்து ஆட்டமிழக்கச் செய்ததன் மூலம் சர்வதேச போட்டிகளில் 800 ஸ்டம்கள் செய்து புதிய சாதனையை படைத்துள்ளார்.

ஆசிய கோப்பை இறுதிப் போட்டியில் இந்திய அணி பங்களாதேஷ் அணியை 3 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்திய அணி வெற்றி பெற்றது. இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 222 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

சதம் அடித்த லிட்டோன் தாஸ் மற்றும் கப்டன் மோர்டாசா ஆகியோரை அசுர வேகத்தில் டோனி ஸ்டம் செய்து வெளியேற்றினார். இதன் மூலம் டோனி தனது கிரிக்கெட் வாழ்க்கையில் புதிய சாதனையை எட்டினார்.

43 ஆவது ஓவரில் மோர்டாசாவை ஸ்டம் செய்ததன் மூலம் அனைத்து வகை கிரிக்கெட் போட்டிகளிலும் மொத்தம் 800 துடுப்பாட்டவீரர்களை ஸ்டம் மூலம் ஆட்டமிழக்க செய்துள்ளார்.

இது ஆசிய அளவில் அதிக ஸ்டம்கள் ஆகும். சர்வதேச அளவில் மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளார். சர்வதேச அளவில் அதிக ஸ்டம்பிங்குடன் (998) தென் ஆபிரிக்க வீரர் மார்க் பவுச்சர் முதலிடத்தில் உள்ளார். ஆஸ்திரேலிய வீரர் எடம் கில்கிறிஸ்ட் 905 ஸ்டம்பிங்குடன் இரண்டாம் இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான டெஸ்ட்; ஷிகர் தவான், பும்ரா, புவனேஷ்வர் நீக்கம்!

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான 2 போட் டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்திய அணியில் இருந்து ஷிகர் தவான் நீக்கப்பட்டு மயங்க் அகர்வால், முகமது சிராஜ் ஆகியோர் அணிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

2018 ஆம் ஆண்டுக்கான ஆசிய கிண் ணத்தை இந்திய அணி வென்ற நிலையில், மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.

இதற்காக விராட் கோஹ்லி தலைமையிலான 15 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக் கப்பட்டுள்ளது.

இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் சரியாக விளையாடாத நிலையில் அணியில் இருந்து ஷிகர் தவான் நீக்கப்பட்டு உள்ளார்.

இதேபோன்று ஜஸ்பிரீத் பும்ரா, புவனேஷ்வர் குமார் ஆகியோருக்கு சமீபத்திய போட்டிகளில் ஏற்பட்ட சுமையால் ஓய்வு வழங்கப்பட்டு உள்ளது.

உள்ளூர் போட்டிகளில் சிறப்பான ஆட் டத்தை வெளிப்படுத்திய மயங்க் அகர்வால், முகமது சிராஜ் ஆகியோர் இந்திய அணியில் சேர்க்கப்பட்டு உள்ளனர்.

முதல் டெஸ்ட் போட்டி ராஜ்கோட்டில் ஒக்டோபர் 4 முதல் 9 வரை நடைபெறுகிறது. 2 வது டெஸ்ட் போட்டி ஹைதராபாத் நகரில் ஒக்டோபர் 12 முதல் 16 வரை நடைபெறும்.

இந்திய அணி விவரம் வருமாறு:-

விராட் கோஹ்லி (தலைவர்), கே.எல். ராகுல், பிரித்வி ஷா, மயங்க், புஜாரா, ரஹானே (துணை தலைவர்), விஹாரி, ரிஷப் பந்த் (விக்கெட் காப்பாளர்), அஸ்வின், ஆர். ஜடேஜா, குல்தீப், சமி, உமேஷ், முகமது சிராஜ், ஷர்துல்

# ரொனால்டோவின் மீது பாலியல் குற்றச்சாட்டு!

போர்த்துக்கல் உதைபந்தாட்ட அணியின் நட்சத்திர வீரர், கிறிஸ்டியானோ ரொனால்டோ மீது ஜேர்மன் நாட்டு பத்திரிகை ஒன்று பாலியல் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

எனினும் கடந்த 2009 ஆம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தைக் கிறிஸ்டியானோ ரொனால்டோ முற்றாக மறுத்துள்ளார்.

கிறிஸ்டியானோ ரொனால்டோவாவினால் கடந்த 2009 ஆம் ஆண்டு அமெரிக்க பெண் ஒருவர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார் என குற்றம் சுமத்தி ஜேர்மன் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

டெர் ஸ்பைஜெல் என்ற பத்திரிகையிலேயே போர்த்துக்கல் காற்பந்தாட்ட அணியின் நட்சத்திர வீரர் தொடர்பான குற்றச்சாட்டு வெளியானது.

அந்த பத்திரிகை தகவல் படி கடந்த 2009 ஆம் ஆண்டு லாஸ்வேகாஸ் விடுதியில் வைத்து கத்ரின் மேயோர்கா என்ற பெண்ணை ரொனால்டோ பாலியல் பலாத்காரம் செய்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தன் மீதான பாலியல் புகாரை ரொனால்டோ மறுத்துள்ளார் என குறிப்பிட்ட பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை. இத்தகைய செய்தி வெளியிட்ட பத்திரிகை மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ரொனால்டோவின் சட்டத்தரணி கிறிஸ்டியன் ஸ்கொர்ட்ஸ் கூறியுள்ளார்.

பத்திரிகையின் இந்தச் செய்தி தனிமனித சுதந்திரத்தை பாதிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே இதற்காக ஊடகவியலாளர்களிடம் இருந்து தனது கட்சி காரருக்கு சட்டரீதியாக நிவாரணம் பெற்றுக் கொடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலக விளையாட்டு வீரர்களில் மிகவும் புகழ் பெற்ற வீரராக ரொனால்டோ விளங்குவதுடன், இவர் ஐந்து முறை உலகின் சிறந்த காற்பந்து வீரருக்கான விருதை வென்றுள்ளார்.

இவர் சமீபத்தில் 100 மில்லியன் யூரோக்களுக்கு ரியல் மெட்ரிட்டிற் அணிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

ரொனால்டோ அண்மையில், போட்டி தடை ஒன்றுக்கும் உட்பட்டதுடன் எதிர்வரும் நாள்களில் மென்செஸ்டர் யுனைடெட் அணிக்கு எதிரான போட்டியில் மீண்டும் விளையாடவுள்ளார்.

அண்மையில் ஐரோப்பா கால்பந்து சங்கங்களின் கூட்டமைப்பு நடத்திய காற்பந்து தொடரில் யுவான்டஸ் அணிக்காக விளையாடிய ரொனால்டோவுக்கு போட்டி தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது



# இலங்கையின் வடக்கு, கிழக்கு தொடர்ந்தும் புறக்கணிப்பு நிலை

## ஜெனீவாவில் சிறிதரன் எம்.பி. விசனத்துடன் சுட்டிக்காட்டு

ஜெனீவா, ஒக்ரோபர் 02

**இலங்கை தீவில் தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் போர் முடிந்து சுமார் 9 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் அந்த பகுதிகள் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், அபிவிருத்தி செய்தல் என்பனவற்றில் புறக்கணிக்கப்பட்டுள்ளன என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்துள்ளார்.**

ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை கவுன்ஸிலின் கூட்டத் தொடரில் கடந்த வியாழனன்று உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார். அவர் அங்கு மேலும் கூறுகையில் –

போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களை மேம்படுத்தவும், புனரமைக்கவும் தொழிநுட்ப உதவிகள் அவசியம். இவ்வாறு போரில் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கில் அடங்கியுள்ளன.

போர் முடிந்து சுமார் 9 ஆண்டுகளுக்குப் பின்னரும் இலங்கையின் உட்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்தியில் வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

வரலாற்று ரீதியான தமிழ் பிராந்தியங்களில் இராணுவ ரீதியிலான இராணுவப் பிரசன்னத்திற்கு உதவும் வகையில் இலங்கையின் தொழிநுட்ப உதவியும் திறனும் கட்டியெழுப்பப்படலாம்.

இலங்கையில் உள்ள ஒற்றையாட்சி முறை மற்றும் தொடரும் இராணுவப் பிரசன்னம் என்பன தமிழர்களின் வரலாற்று தாயகப் பிரதேசங்களில் தமிழர்களின் தேசியத்தையும் அவர்களின் தாயகத்தின் சுயநிர்ணய உரிமைகளையும் மறுக்கின்றன.

இந்த நிலையில் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கவும் விசேட செயற்பாடுகளை முன்னெடுக்கவும் நாங்கள் கோரிக்கைவிடுக்கின்றோம். இலங்கையின் இனப்படுகொலை அரசியலில் இருந்து தமது தாயகத்தில் வாழும் தமிழ் மக்களை பாதுகாக்க வேண்டும்.

தமிழர்களுக்கு எதிரான இனப் படுகொலை தொடர்பில் சுயாதீன மான விசாரணை ஊக்குவிக்கப் பட வேண்டும்.

வட மாகாணசபை அங்கீகரித்தை போன்று சுயநிர்ணய உரிமைகளுக்காகவும், தமிழர்களின் உரிமைகளை அங்கீகரிப்பதற்காகவும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதற்கான உந்துதல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அத்துடன், இலங்கையின் மனித உரிமை ஆர்வலர்களின் பாதுகாப்பை மனித உரிமைகள் கவுன்ஸிலில் உறுதிப்படுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மக்களின் உரிமைகளை மேம்படுத்த ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு நிதி ரீதியான ஆதரவுகளை நாடுகள் வழங்க வேண்டும் என அழைப்பு விடுக்கின்றோம். – எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



அத்துடன், பிரிட்டனில் ஈழத் தமிழர்கள் செறிந்து வாழும் ஈஸ்ட் ஹாம் பகுதியின் நாடாளுமன்ற உறுப்பினரான Stephen Timms MP உடன் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன். ஜெனீவாவில் கலந்துரையாடலையும் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# புலிகளுக்குப் பயந்து நாட்டை விட்டு ஓடினோமா? மைத்திரியின் கருத்தை மறுக்கின்றார் பொன்சேகா

கொழும்பு,ஒக்.01

போரின் இறுதி இரண்டு வாரங்களில் விடுதலைப் புலிகளின் விமானத் தாக்குதல் அச்சத்தினால், இலங்கையின்அரசியல், இராணுவத் தலைமைகள் வெளிநாட்டில் ஓடி ஒளிந்து கொண்டன என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருந்த தகவலை அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மறுத்துள்ளார்.

அப்போது இராணுவத் தளபதியாக இருந்த தற்போதைய அமைச்சர் சரத் பொன்சேகா, நியூயோர்க்கில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட கருத்துக்களை முற்றாக நிராகரித்திருக்கிறார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதிகாரபூர்வ பயணமாகவே வெளிநாடு சென்றிருந்தார். அவர், 2009 மே 16ஆம் திகதி நாடு திரும்பினார்.

அதிகாரபூர்வ விடயமாக நானும் சீனாவுக்குச் செல்ல வேண்டியிருந்தது. எந்த அழுத்தங்களாலும் நாங்கள் இந்தப் பயணங்களை மேற்கொள்ளவில்லை.

அந்தக் கட்டத்தில் எல்லாமே மிகக் கவனமாக திட்டமிடப்பட்டிருந்தன. விளைவு நிச்சயம் உறுதியாகி விட்டது.

போரின் இறுதி இரண்டு வாரங்களில், கோப்ரல்களும் சார்ஜன்ட்களும்தான் நிறைய வேலை செய்தனர். களத்தில் எமது கட்டளைகளை அவர்கள் நடைமுறைப்படுத்த வேண்டியிருந்தது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிப்போர் இரண்டரை ஆண்டுகள் நீடித்த ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கை.

இரண்டு ஆண்டுகள் முன்னெடுக்கப்பட்ட போரின் சிக்கல்களை இரண்டு வாரங்கள் பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஒருவரால் புரிந்து கொள்ள முடியுமா?

போரின் இறுதி இரண்டு வாரங்களிலும், கோட்டாபய ராஜபக்ஷ வெளிநாட்டுக்குச் செல்லவில்லை. – என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# காரைநகரில் குளங்கள் புனரமைப்பு





களபூமி சத்திரந்தை உதிராப்பிட்டிக் குளம்



களபூமி கிழவனைவாய்க்கால் புனரமைப்பு



கோவளம் நாராயினி கேணி



மெலிஞ்சோடைக் குளம் புனரமைப்பு

காரைநகரில் குளங்கள், கேணிகள், கால்வாய்கள் புனரமைப்புப் பணிகள் தற்போது துரிதமாக நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் கமக்கார அமைப்புக்கள், காரைநகர் இளம் விவசாயிகள் கழகம், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றின் பங்குபற்றுதலுடன் நடைபெறுகின்றன. இப்புனரமைப்பு பணிகளுக்கு நிதி அனுசரணையை காரை அபிவிருத்திச்சங்கம், சுவிஸ் காரை அபிவிருத்திச்சபை, நாதன் நற்பணி மன்றம் ஆகிய நலன்புரிச் சங்கங்கள் நிதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை
கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள்
பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை



20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**

இல.10, மாநகரசபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536

நெல்லியடியில் – இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576

சாவகச்சேரியில் – இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

கிளிநொச்சியில் – இல.10, கண்டி வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (தம்ரோ காட்சியறை அருகில்). 076 443 1576


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.10.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.